FRIENDS MISSIONARY PRAYER BAND

for Young friends of fmpb

# கேரீஸ்

இளைஞர் மாத இதழ்

Vol 25-Issue 03 - Mar - 2025
A monthly Prayer Bulletin for
**Youth & Teens**



# துவளாமல் முன்னேறி வா!

Private circulation only

# வெண்கல பலிபீடம்



# THE BRAZEN ALTAR

Rev. Selvinraj G Charles

அன்புவாலிபதம்பிதங்கைகளே! ஆசரிப்புகூடாரத்திலுள்ள வெண்கல பலிபீடத்தின் மூலமாய் ஆசாரியர்கள் மக்களின் பாவத்திற்கு விலங்குகளைப் பலியிட்டு, இஸ்ரவேலர்கள் கடவுளின் அடையாளமாக மன்னிப்பையும், கடவுளுடனான சமரசத்தையும் தேடினர். அதுபோல நாமும் காளைகளின் பலியாகிய உதடுகளின் பலியைச் செலுத்தி ஆண்டவரை ஆராதிப்போம்.

நுழைவாயிலில் பிரவேசித்தவுடனே அங்கே காணப்படுவது இந்த வெண்கல பலிபீடமாகும். இது சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு தாமிர உலோகத்தால் முழுவதும் மூடப்பட்டிருக்கும். இது ஏழரை அடி அகலமும், நான்கரை அடி உயரமும் இருக்கும். அதில் நாலு மூலைகளிலும் நான்கு கொம்புகள் பொருத்தப்பட்டிருக்கும்.

### 1. பொருள் குறியீடு (MATERIAL CODE):

கூடாரத்தில் வெண்கல பலிபீடம் என்பது கடவுளுக்கு பலிகள் செலுத்தப்படும் இடத்தைக் குறிக்கிறது. வெண்கலம் பெரும்பாலும் வேதத்தில் நியாயத்தீர்ப்புடன் தொடர்புடையது. பாவத்தின் கடுமைகளையும், கடவுளைத் திருப்திப்படுத்த ஒரு பலியின் அவசியத்தையும் எடுத்துக்காட்டுகிறது. பாவம் நியாயந்தீர்க்கப்படுவதையும், இரத்தம் சிந்துவதன் மூலம் பரிகாரம் செய்வதற்கான தேவையையும் குறிக்கிறது.

### 2. பரிகாரம் (REMEDY):

அடிப்படையில் கடவுளை அணுகுவதற்கு ஒருவன் தனது பாவத்தை ஒப்புக்கொண்டு, தியாகத்தின் மூலம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்பதை இந்த காட்சி நினைவூட்டலாக இருந்தது. வெண்கல பலிபீடத்தின் மீது பலி செலுத்துவது பாவமன்னிப்பைப் பெற்றுக் கொண்டதற்கான அடையாளம் என எண்ணினர்.

### 3. அக்கினியினால் பலிபீடம் எரியும்போது (THE ALTAR IS BURNING WITH FIRE):

பலிபீடத்திலிருக்கும் அக்கினியினால் பலிபீடம் கருகும்போது உட்புறமாகிலும், வெளிப்புறமாகிலும் காணப்படாதபடிக்கு உண்டாக்கப்பட்டிருக்கும். காரணம், கிறிஸ்து மாம்சத்தில் படும்பாடுகளை ஒருவரும் காணக்கூடாததற்கு அடையாளமாக இருக்கிறது (1பேதுரு 4:1). அநேககிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்து சிலுவையில் பட்ட வெளிப்பிரகாரமான பாடுகளை மாத்திரமே அறிந்திருக்கிறார்கள். ஆனால் இயேசு தாம் பூமிக்குரிய வாழ்க்கையில் பட்ட உள்ளான பாடுகளைக் குறித்து ஒன்றும் அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள். ஒவ்வொருநாளும் வெவ்வேறு சூழ்நிலையில் சோதனைகளைச் சகித்தபோது அவர் ஒருக்காலும் துக்கப்பட்டு கண்ணீர் விடவில்லை. நம்முடைய துக்கங்களுக்காகவே அவர் கண்ணீர் விட்டார். நம் பாவத்திற்காக, துக்கங்களுக்காக கண்ணீர் விட்ட இயேசுவை நன்றி உள்ளத்தோடு துதிப்போமா!

### 4. நான்கு கொம்புகள் (FOUR HORNS ON THE FOUR CORNERS):

பலிபீடத்தின் நான்கு முனைகளிலும் நாலு கொம்புகள் உண்டாக்கப்பட்டிருந்தது. இதற்கு காரணம் பலியிடப்பட வேண்டிய பலி கொல்வதற்கு முன்பு கொம்புகளில் கட்டப்பட்டிருக்கும். அது தாம் எருசலேமுக்கு போகும்போது (சிலுவையில் மரிக்க) இருந்த உறுதியான மனநிலையைக் காட்டுகிறது (லூக்கா 9:51). இந்த நிலையான உறுதியைப் பெற்றுக்கொள்ள அனுதினமும் சிலுவையைச் சுமக்கிறதிலே (சுயத்திற்கு மரிக்க) நாமும் விருப்பமுள்ளவர்களாகவும், கட்டப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

**இந்த மாதத்தில் நாமும் ஆசரிப்பு கூடாரத்திற்கு வந்து, வெண்கல பலிபீடத்தின் நான்கு கொம்புகளில் கட்டப்பட்ட பலிகள் உறுதியாக இருந்தது போல், நாமும் ஆண்டவரைத் துதிப்பதில் உறுதியாக இருந்து அவரை ஆராதிப்போம்.**

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**

**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 7 |
| கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில் | - 8 |
| கழுகுகளின் நாடு | - 10 |
| இயக்க இயலாமைக் குறைபாடு | - 12 |
| டிஜிட்டல் மோசடி - Matrimonial Scam | - 14 |
| தெரிஞ்சுக்கோ... புரிஞ்சுக்கோ... | - 20 |

# தோல்வியில் துவளாமல் வா

**என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!**

தோல்வி என்னும் பாடசாலைக்கு எவரும் தப்பியதில்லை. வெற்றிகளைவிட தோல்விகளிலிருந்தே நாம் அதிகம் கற்றுக் கொள்கிறோம். எதிர்ப்புகள், சோதனைகள், வீழ்ச்சிகள் இவை ஆண்டவருடைய பிள்ளைகளின் வாழ்வில் வரும்போது தேவன் அவர்களைத் தூக்கி எடுப்பதால் அவர்கள் எழுந்திருப்பார்கள். நம்மெல்லோருக்கும் சில வேளைகளில் ஆபத்தும், துன்பங்களும் வருவதுண்டு. அப்படிப்பட்ட நேரத்தில் ஆண்டவருடைய பிள்ளைகள் தேவனில் பலப்பட்டு அவரையே அடைக்கலமாகக் கொள்ள வேண்டும். சோதனை, தோல்வி நேரத்தில் தம்மை உண்மையாய் சார்ந்திருப்பவர்களுக்கு தேவன் தேவையான பெலத்தையும், கிருபையையும் தருகிறார்.

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவின் பிரசன்னத்தையும், வல்லமையையும் அனுபவிக்கிறவங்களாயிருந்தால் எந்தவிதமான துன்பமோ, வியாதியோ அல்லது துக்க சம்பவமோ உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் தோல்விக்கு காரணமாயிராது. தம்மிடம் விசுவாசமாயிருக்கும் அவருடைய பிள்ளைகளை எந்த சூழ்நிலையிலும் தேவன் கைவிடமாட்டார்.
“நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்” (நீதி. 24:16)

மே மாதம் 15ஆம் தேதி முதல் 18ஆம் தேதி வரை பெத்தேலில் (சேலம்-டேனிஷ்பேட்) நடைபெறவிருக்கும் மாநில முகாமிற்காக ஜெபித்து ஆயத்தமாகுங்கள். இன்று ஆண்டவருக்கென சாட்சிகளாய் வாழ்ந்துகொண்டிருக்கிறவர்கள் மற்றும் ஆண்டவருடைய ஊழியத்தை வல்லமையாய் செய்கின்றவர்களில் திரளானோர் நமது மாநில முகாமில் கலந்து கொண்டவர்கள். உங்கள் சபை / பகுதி வாலிபர்களிடம் நீங்கள் பேசி திரளாக கலந்துக்கொள்ளச் செய்யும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். மார்ச் 5ஆம் தேதி தொடங்கயிருக்கின்ற லெந்து நாட்களில் உங்கள் பகுதியில் சங்கிலித் தொடர் ஜெபத்தை ஏற்படுத்தி ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நமது கேரீத் பத்திரிக்கையை தெரியாதவர்களுக்கு அறிமுகம் செய்து வாலிபர்கள் கிறிஸ்துவுக்கென எழும்பி பிரகாசிக்க ஜெபத்துடன் பிரயாசப்படுங்கள்.

கர்த்தர்தாமே உங்கள் வாழ்வில் ஜெயத்தைக் கட்டளையிடுவாராக. ஜெபிக்கிறோம்!
ஆசீர்வதிக்கிறோம்!

கிறிஸ்துவின் பணியில்,
*ஜெ. டேனியல் அருள்மணி*

# பாதியில் நின்ற ஊழியம்


## தேராகு



நாம் அனைவரும் ஆபிரகாமின் சரித்திரத்தை ஆதியாகமம் 12ல் இருந்துதான் வாசிப்போம். உண்மைதான், ஆபிரகாமின் சரித்திரம் மிகப்பெரியது. ஒரு யூத ரபீ அவரது ஆராய்ச்சி புத்தகத்தில், ஆபிரகாமின் சரித்திரத்தைக் புரிந்து கொள்ள, கற்று முடிக்க ஒருவனின் ஆயுள் காலம் போதாது என்று குறிப்பிடுகிறார். உண்மைதான் ஏனென்றால் ஆபிரகாமின் சரித்திரம் புரிந்தால் தான் வேதாகம சரித்திரம் புரியும். மட்டுமல்லாமல் உலக சரித்திரம், மதம் மற்றும் சபை சரித்திரம், கிறிஸ்துவின் மீட்பு மற்றும் இரண்டாம் வருகை இவையெல்லாம் புரியும் என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும் என்று எனக்குத் தெரியவில்லை. இப்போது செய்திக்குச் செல்வோம். ஆபிரகாமின் சரித்திரத்தை நாம் சற்று கீழ்சென்று அதாவது ஆதியாகமம் 11ஆம் அதிகாரத்தின் கடைசி பகுதிச் சென்று ஆரம்பித்தால் நம்முடைய புரிதல் வேறுபடும்.

ஆம்! சரிதான் நாம் நினைத்துக் கொண்டிருந்தது போல் தேவனுடைய அழைப்பை ஏற்று ஆபிரகாம் தன் குடும்பத்தையும், இனத்தையும், சொந்த பூமியையும் விட்டு புறப்படவில்லை. புறப்பட்டது அவனுடைய தகப்பன் தேராகு என்பது தான் சரி. புறப்பட்ட இடம் ஊர் (Ur). ஊர் என்ற ஊரிலிருந்து (இன்று தெற்கு ஈராக்கில் உள்ளது) புறப்பட்டான் என்று வசனம் தெளிவாக சொல்லுகிறது. என்னவென்றால் *“தேராகு தன் குமாரனாகிய ஆபிராமையும், ஆரானுடைய குமாரனும், தன் பேரனுமாயிருந்த லோத்தையும், தன் குமாரன் ஆபிராமுடைய மனைவியாகிய தன் மருமகள் சாராயையும் அழைத்துக்கொண்டு, அவர்களுடனே ஊர் என்கிற கல்தேயருடைய பட்டணத்தை விட்டு, கானான் தேசத்துக்குப் போகப் புறப்பட்டான்” (ஆதி. 11:31).*

முதலாவது ஆபிரகாமின் அழைப்பின் பின்னணியத்திலிருந்து வருவோம். தேவன் ஆபிரகாமை அழைத்தார், அது அந்நாட்களில் புரிந்து கொள்ள முடியாத ஒன்று. தேவனின் அழைப்பை ஆபிரகாம் கேட்டு உடனே முடிவெடுத்து புறப்படமுடியாது. ஏனென்றால் குடும்பத்தில் மூத்த ஆண் தான் அன்றைய சமுதாயத்தில் முடிவு எடுக்க வேண்டும் அல்லது ஒப்புதல் அளிக்க வேண்டும். இங்கு மூத்த ஆண் தேராகு, 2வது ஆரான், 3வது ஆபிராம், 4வது நாகோர். ஆபிரகாமிடம் நோவாவின் தேவன் பேசி சொன்னது, நீ உன் இனத்தையும், உன் இடத்தையும் விட்டு புறப்படு என்று. அதை தன் தகப்பனாகிய தேராகிடம் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் தேராகு பதில் ஒன்றும் சொல்லாமலிருந்து விட்டான். காலங்கள் உருண்டோடியது. ஆராய்ச்சியின் கூற்றுப்படி குறைந்தது 20 ஆண்டுகள் ஓடியிருக்க வேண்டும். இப்போது ஆபிரகாமின் அண்ணன் ஆரான் மரிக்கிறான். இது தேராகை மிகவும் பாதித்தது மட்டுமல்லாமல், இது தெய்வ கோபம் அல்லது சாபம் என்று நினைத்திருக்க வேண்டும். ஆபிரகாமிடம் நோவாவின் தேவன் பேசியது இப்போதுதான் தேராகுக்கு ஞாபகம் வருகிறது. உடனே ஊர் என்ற கல்தேயர் பட்டணத்தை விட்டு தனது மகன் ஆபிராம், பேரன் லோத்து, தனது மருமகள் சாராய் இவர்களோடு புறப்படுகிறான் (ஆதி. 11:31). இந்த கூட்டம் புறப்பட்டு



பயணம் செய்த தூரம் 600 மைல் (950 கி.மீ). அதாவது யூப்பிரடீஸ் நதியின் மேற்பகுதியில் அமைந்த, அதாவது இன்றைய மேற்கு துருக்கியின் ஒரு பகுதியிலுள்ள பட்டணத்திற்கு வந்தடைகின்றனர். எவ்வளவு காலம் தங்கினார்கள் என்றால், இந்த பட்டணத்தைத் தங்களின் சொந்த பட்டணம் என்று ஆபிராம் மற்றும் ஈசாக்கு சொல்லும் அளவிற்கு அங்கே தங்கிவிட்டனர். இந்த பட்டணத்திற்கு தேராகு தன் மூத்த மகன் ஆரானின் பெயரை வைத்திருக்க வேண்டும். பின்பு தேராகு மரிக்கிறான். இப்பொழுது ஆபிரகாமிடம் தேவன் மீண்டும் பேசுகிறார். இப்பொழுது ஆபிராம், சாராய் மற்றும் லோத்தோடு கூட ஆராமிலிருந்து புறப்படுகிறார்கள் (ஆதி.15:7). அடைப்புக்குள் உள்ள குறிப்பை தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். (ஆபிராமுக்கு முதல் அழைப்பு ஊர் பட்டணத்தில் இருக்கும் பொழுது - நெகே.9:7, அப். 7:2, 2ஆம் அழைப்பு ஆரானிலிருந்து ஆதி. 12:1, 15:7)

இப்போது மீண்டும் தேராகுக்குச் செல்வோம். தேராகு என்பதின் அர்த்தம் தாமதம் (Delay), மற்றொரு அர்த்தம் அலைந்து திரிபவன் (Wanderer). அர்த்தத்தைக் கேட்டால் நம்முடைய தலைப்புதான் ஞாபகத்துக்கு வருகிறது. சரி விஷயத்துக்கு வருவோம், புறப்பட்ட தேராகு ஆரான் மட்டும் வந்தபோது அங்கே இருந்துவிட்டான் என்று வேதம் சொல்கிறது என்பதுதான் மில்லியன் டாலர் கேள்வி. அடுத்த வசனம் இப்படியாக முடிகிறது, தேராகு ஆரானிலே மரித்தான். புறப்பட்ட தேராகு பாதியில் நிற்க என்ன காரணங்கள் இருந்திருக்கக் கூடும்.

### நம் சிந்தைக்கு எட்டிய 3 காரணங்கள்:

1. மூத்த மகனின் மரணம், அவனது பெயரை அந்த பட்டணத்திற்கு வைத்துவிட்டு அங்கேயே இருந்து விட்டான்.
2. அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிந்து இவ்வளவு நீண்ட தூரம் வந்துவிட்டோம். இது போதும் என்ற எண்ணம்.
3. அல்லது விக்கிரக பட்டணமாகிய ஊரை விட்டுவிட்டோம். ஆனால் கானானியர் வாழும் பட்டணம் எனக்குப் பிடிக்கவில்லை என்று அர்த்தமாம்.

மூன்றில் எது என்பது உன்னால் யூகிக்க முடிகிறதா. இன்று நம்மில் அநேகர் மேற்சொன்ன மூன்றில் ஏதாவது ஒன்றில் பாதியில் நிற்கிறோம். குடும்பத்தின் பாதிப்பு (Sorrow), திருப்தி (Satisfaction), கானானியன் (Somewhat not like people). தனிநபரானாலும் சரி, சங்கங்களில் இணைந்து பணிபுரியும் ஊழியர்களானாலும் சரி மற்றும் தன்னார்வ பணியாளர்களானாலும் சரி மேற்சொன்ன மூன்றில் ஒன்றில் தான் தங்களுடைய ஊழியத்தை நிறைவு செய்யாமல் முடிக்கிறோம். அதாவது குடும்பத்தின் பாரம், கவலை அல்லது இத்தனை ஆண்டுகள் உழைத்து விட்டேன் போதும் என்ற எண்ணம் அல்லது புதிய தலைமைத்துவத்தையோ, மக்களையோ ஏற்றுக் கொள்ள முடியாமல் ஊழியத்தை ஆரானிலே முடிப்போரின் எண்ணிக்கை இன்று உயர்ந்து கொண்டே வருகிறது. ஆபிரகாம் சரித்திரம் ஆதி. 12ல் ஆரம்பித்து வெளி 22 வரை வருகிறது என்றால் தேராகுடைய ஊழிய சரித்திரமும் தொடர வேண்டியதுதான். ஆனால் ஒரு வசனத்தில் ஆரம்பித்து அதே வசனத்தில் (ஆதி. 11:31) முடிந்துவிட்டது. அடுத்த வசனம் தேராகுவின் வாழ்க்கைத் தொகுப்பு. “தேராகு மரித்தான்” என்று வேதம் முடிக்கிறது.

சகோதரனே! சகோதரியே! தேவன் உனக்கு கொடுத்த ஊழியத்தை ஆரானிலே முடித்துவிடாதே.

*“உங்கள் செய்கைகளின் பலனை இழந்துபோகாமல், பூரண பலனைப் பெறும்படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்” (2 யோவான் 1:8)*

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

FELLOWSHIP LUNCH

Mr. Isaac Kamalesh

(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)

சென்ற மாதம் சொன்னது போல நாலுபேரும் சரியாக ஜமீன்புரத்திலுள்ள "மருமகா கை சமையல்" உணவகத்திற்கு வந்துவிட்டனர்.

விஷயம்: வாங்க பெரியவரே! நீங்க சொன்ன கடை ஒரு Designஆ! இருக்கு

சாதுரியன்: நல்லவேளை, பெரியாரேனு சொல்லாம, பெரியவரேனு சொன்ன!

ரகசியம்: உன்னை அப்படி சொன்னாலும் தப்பில்லைனு நினைக்கிறேன்.

விஷயம்: என்னடா, இங்கு ஆண்கள் சாப்பிடலாமா!!

(நாலு பேரும் சிரிப்பு)

சாதுரியன்: டேய், இது 100% அனைத்தும் பெண்களாக நடத்தப்படும் உணவகம்.

விஷயம்: சரி சரி புரியுது. போன மாதம் சாப்பாட்டு முடிக்கிறதுக்கு முன்னாடியே கடையை செலக்ட் பண்ணி சொல்லும் போதே சின்ன Doubt, இப்ப புரியுது.

சத்தியன்: இங்க என்னடா Special. ஆணாதிக்க சோறு, பெண் அடிமை துவையல் அப்படின்னு ஏதும் உண்டா?

சாதுரியன்: அப்படியெல்லாம் ஒன்னும் இல்ல. இங்க ஒரே மெனு தான். முதல்ல கையைக் கழுவிட்டு, நல்ல Corner Sheatஆ பார்த்து உட்காருவோம்.

சாதுரியன்: பெண்ணடிமை, பெண்ணடிமைன்னு ரொம்ப பேசுறாங்க. முன்னாடி அதுக்கு போராட்டமெல்லாம் நடந்திருக்கு. இப்ப "பெண்கள் தினம்"னு கொண்டாட ஆரம்பிச்சுட்டாங்க.

ரகசியம்: அப்படி பார்த்தா ஆண் அடிமைகளுந்தான் இருக்காங்க. வீட்ல... வேலைப்பார்க்கிற இடத்துல...

விஷயம்: உன் கஷ்டம் புரியுதுடா

(மூவரும் சிரிப்பு) (இலையும், ஒரு டம்ளரில் தண்ணீரும் வைக்கப்படுகிறது)

சத்தியன்: டேய், அந்த அக்காவைக் கூப்பிட்டு தண்ணியை மாத்த சொல்லு. உள்ளே ஏதோ கிடக்குது.

சாதுரியன்: டேய் கேவலப்படுத்திராத, இது மூலிகைத் தண்ணீர். அப்படித்தான் இருக்கும்.

(மேனேஜர் ஒரு பெண்ணை அதிகமாக திட்டுகிறார்)

விஷயம்: என்னடா இது, பெண் ஆதிக்கத்தில், பெண்ணடிமையா

(எல்லோரும் சிரிப்பு)

சத்தியன்: மேனேஜர் மட்டும் ஆணா இருந்திருந்தா, இதை ஆண் ஆதிக்கம்னு சொல்லியிருப்பாங்க. மொத்தத்துல ஆதிக்கம் இருபாலாரிடத்திலும் உண்டு. ஆதிக்கம் என்பது ஒரு "மன பிறழ்வு நோய்". அதாவது தங்களுடைய இயலாமையையோ, குறைகளையோ, பலவீனங்களையோ மூடி மறைக்க தங்களைச் சார்ந்த குடும்பம், தொழிலாளர்களை மட்டுப்படுத்தி தங்கள் ஆளுகைக்குள் வைத்திருப்பது.

சாதுரியன்: சரியாய் சொன்னடா!

ரகசியம்: டேய் சத்தியன், பெண்ணாதிக்கத்தைக் குறித்து Bible என்னடா சொல்லுது.

சத்தியன்: Bibleல "பெண்மை" (Femininity) அதாவது பெண்ணின் இயல்பான குணநலன்களைச் சித்தரிக்கும். மேலும் "பெண்ணியம்" (Feminism) பற்றியும் இருக்கும். Feminism இருபாலாருக்கும் இடையேயுள்ள சமத்துவத்தைப் பற்றி உணர்த்தும். ஒருபோதும் பெண்ணியவாதியாக (Feminist) சொல்லப்படவில்லை. Feminist என்பது இருபாலாரும் சமமானவர்கள் (same) என்பது கருத்து. ஆனால் வேதம் சொல்லுவதோ, இருபாலாரும் நிகரானவர்கள் (equal).

மற்ற மூவரும்: Super da

ரகசியம்: டேய் சோறு எப்ப வரும்...

சாதுரியன்: கேட்டுடாத... இங்க எல்லாம் வரிசையா சரியான நேரத்தில வரும். ரா வெஜிடபிள் கூட்டு, semi boiled கூட்டு, பொரியல், 4 வகை கீரை மொத்தம் 11 வகை வரும். மேலும் 3 வகையான துவையல், 3 கலர்ல ரைஸ், 2 வகை ரசம், 4 வகை குழம்பு, என ஒன்னு ஒன்னா வரும். கடைசியா 2 வகையான பாயாசம் வரும். குறைஞ்சது ஒரு மணி நேரம் பேசிக்கிட்டே சாப்பிடலாம்.

ரகசியம்: அப்படின்னா Bill எவ்வளவுடா போடுவாங்க.

சாதுரியன்: சரியா கேட்ட, ஒரே இலையில சுமார் 8 வகையான GSTயோட சேர்த்து Just 599/- தான்.

(மற்ற மூவரும் ஓ... ஓ... Super Super)

சாதுரியன்: கடைசில ஒரு சர்ப்ரைஸ் உண்டு. அத கடைசியில பார்ப்போம்.

சத்தியன்: டேய் ரகசியம் எதையோ யோசித்துக்கிட்டே இருக்கியே டா

ரகசியம்: நீங்க யாரும் சிரிக்க கூடாது. போனவாரம் பெண்கள் ஒரு சிலர் ஆராதனை முடிஞ்ச பிறகு என்னிடம் வந்து வருகிற மார்ச் 9ஆம் தேதி ஆராதனையில் ஒரு சிறப்பு நிகழ்ச்சி கொடுப்போமென்று சொன்னாங்க.

(மற்ற மூவரும் ஒரே குரலாக நீ என்ன சொன்ன)

ரகசியம்: வேண்டாம்னு சொன்னா ஆணாதிக்கம்னு முத்திரை குத்திடுவாங்க. அதனால நான் சரின்னு சொல்லிட்டேன்.

(மூவரும் ஒரே குரலாக என்ன நிகழ்ச்சினு தான் சொல்லேண்டா)

ரகசியம்: அது ஒரு கோலாட்டம்னு சொன்னாங்க

(மூவரும் சிரிப்பு)

(இதன் தொடர்ச்சி 7-ம் பக்கம்)



# மனசு இல்லா ஊழியம்
## (அமோக விளைச்சல்)
### யோனா

Rev. Daniel Gnanapragasam



ஊழியம் செய்தல் என்பது கடவுளுக்குச் சேவை செய்வதையும், அதனால் நம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்வில் நன்மைத் தரும் மாற்றத்தை ஏற்படுத்துவதையும் உறுதிப்படுத்துவதாகும். அன்பு, இரக்கம் மற்றும் தேவைப்படுவோருக்கு சேவை என்ற நோக்கங்களே ஊழியம் செய்வதற்கு அடிப்படையான பண்புகளாகும். இந்தப் பகுதியில் யோனா தீர்க்கதரிசியின் **"மனசு இல்லா ஊழியம்"** என்ற தலைப்பில் சிந்திக்க இருக்கின்றோம்.

தீர்க்கதரிசி என்பவன்:

- தேவனுடைய இருதயத்தைப் புரிந்து கொள்பவன்
- தேவனுடைய வாயாக இருந்து செயல்படுபவன்
- தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுபவன்

இங்கே யோனா தீர்க்கதரிசிக்கு, நினிவேக்குப் போய் அதற்கு விரோதமாகப் பிரசங்கிக்கும்படி கர்த்தருடைய சத்தம் உண்டானது (யோனா 1:2). நினிவே பாதுகாப்பான நகரம், செழிப்பான நகரம் (நாகூம் 2:9). நாகூம் புத்தகத்தில் அவர்களுடைய அக்கிரமங்களாக மதுபான வெறி, விக்கிரக ஆராதனை, இரத்தபழி, வஞ்சகம், கொடுமை, கொள்ளை, கொலைகள், வேசித்தனம், சூனியம் போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய அக்கிரமங்கள் கர்த்தருடைய சமூகத்தில் வந்து எட்டினது. நினிவேக்கு சென்று கடவுளின் வார்த்தையை எடுத்துரைக்க வேண்டிய யோனாவோ ஒரு **"கீழ்ப்படியாமையின் பயணம்"** ஒன்றைத் தேர்வு செய்கிறான்.

- ✦ தேவ சத்தத்திற்கு விலகினான்.
- ✦ தேவ சித்தத்திற்கு விலகினான்.
- ✦ தேவ சமூகத்திற்கு விலகி, தர்ஷீசுக்கு பயணப்படுகிறான்.

### ஏன் இந்த கீழ்ப்படியாமையின் பயணம்?

1. **சுயநீதி:** இஸ்ரவேலர்களாகிய நாங்கள் மட்டுமே தேவனுடைய இரக்கத்தைப் பெற தகுதியானவர்கள். அவர்கள் தண்டனைக்கு உரியவர்கள்.
2. **சுயசித்தம்:** இஸ்ரவேலரை அடிமைப்படுத்திக் கொண்டிருந்த அசீரியர்களின் ஆதிக்கத்தை விரும்பாத யோனாவின் மனநிலை (2 இராஜாக்கள் 15:19, 29)
3. **சுயநலம்:** தான் கூறியது நடக்காவிட்டால், தன்னை தீர்க்கதரிசியென்று இஸ்ரவேலர் நம்பமாட்டார்கள்.

இத்தகைய குணநலன்கள் நினிவே மக்கள் மீதான தேவனுடைய இரக்கத்தைப் (எச்சரிப்பை) புரிந்து கொள்ளச் செய்யாமல், அவனுடைய இருதயத்தைக் கடினமாக்கியது. பாவிகளையும் நேசிக்கும் நம் கடவுளின் அன்பு (ரோமர் 5:8) இன்றும் தொடர்கிறது. தம் வல்லமையை வெளிப்படுத்தியதால் சமுத்திரம் குலுங்கியது (ஏசா. 57:15 மற்றும் எரே. 31:35). கீழ்ப்படியாமல் நினிவேயைத் தவிர்த்து தர்ஷீசுக்கு சென்று கொண்டிருந்த யோனாவின் பயணம் (அதிகாரம் 1, 2) கீழ்ப்படிந்தே ஆக வேண்டிய கட்டாயத்தோடு "விருப்பமில்லாத பயணமாக" (அதிகாரம் 3, 4) தொடர்கிறது. மூன்று நாள் பிரயாணமான விஸ்தாரமான மகா பெரிய நகரமாகிய நினிவேயில் ஒரு நாள் பிரயாண தூரம் மட்டுமே பிரயாணம் செய்து "இன்னும் 40 நாள் உண்டு, அப்போது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம்" என்னும் சிறிய பிரசங்கத்தை (எபிரெய மொழியில் 5 வார்த்தை பிரசங்கம்) செய்தான். ஏன் இந்த அழிவு? எப்படி நடக்கும்? தப்பித்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்? என்ற எந்தவொரு விளக்கமும் இல்லாத தெளிவற்ற பிரசங்கம்.

### யோனாவின் ஊழியம்:

i. மறு வாய்ப்பாகப் பெற்ற ஊழியம் (3:1): அது அவனுடைய சுயநீதியை அழித்து, புதுப்பிக்கப்பட்ட மனதோடு ஊழியம் செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறது (1 தெச. 4:3).

ii. மனமில்லாமல் செய்த ஊழியம் (3:4): மக்களைப் பாவ தண்டனையிலிருந்து விடுபட அழைப்பதே ஊழியமாகும். அது சுயசித்தத்தை வெளிப்படுத்த அல்ல. தேவ சித்தத்தை உள்ளடக்கியது (1 தெச. 2:4). யோனாவின் மனதோ நினிவே மக்களின் அழிவை விரும்பியது (யோனா 4:5).

iii. மனமாற்றத்தை விரும்பாத ஊழியம் (3:5): தெளிவற்ற யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு கர்த்தரிடம் திரும்பிய நினிவே மக்களின் மனமாற்றம், யோனாவின் சுயநலத்தை உடைத்தெறிந்து கடவுளின் இரக்கத்தை உணர்த்தியது (எசே. 18:30).

"இரட்சிப்பு கர்த்தருடையது; அது அனைத்து மக்களுக்கும் தேவையானது" என்ற மையக்கருத்தை உள்ளடக்கிய நம் வேதாகமத்திலே, யோனா புத்தகம் கடவுளின் அன்பையும், அவருடைய வல்லமையையும் மற்றும் எல்லோரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்கிற அவருடைய சித்தத்தையும் தெளிவாக விவரிக்கிறது. இரட்சிக்கப்படுவதினால் பாவ மனிதர்களின் மனம் மாறி, கடவுளோடு அவர்களின் உறவு புதுப்பிக்கப்படும். அதேவேளையில் கடவுளின் குணாதிசயங்களையும் உணர்ந்து கொள்ள முடியும். எனவே இரட்சிக்கப்படுதல் (அல்லது) மனந்திரும்புதல் என்ற அனுபவம் ஒரு நாணயத்தின் இருபக்கங்களைப் போல கடவுளுடைய இரக்கத்தோடு மனிதர்களின் விருப்பத்தையும் உள்ளடக்கியது.

இங்கே நினிவே மக்களின் உடனடி மனமாறுதல், 40 நாட்களுக்கு பின்பு சோதோம் கொமோராவைப் போல கவிழ்க்கப்படயிருந்த அழிவைத் "தேவனுடைய கிருபையாக" மாற்றியது. ராஜா முதற்கொண்டு மனுஷருக்கும், மிருகங்களுக்கும் வரவிருந்த உக்கிரகோபத்தின் வெளிப்பாடு மாறி, "அமோக விளைச்சல்" என்ற ஆத்தும அறுவடையைச் சாத்தியமாக்கியது. தேவனுடைய கிருபையோடு தம் கிரியைகளின் மூலம் ஒன்றிணைந்த நினிவே மக்களின் விநோதமான மறுமொழியை நாம் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

- தேவன் மேலிருந்த விசுவாசம் (3:5)
- தேவனுக்கு உகந்த உபவாசம் (3:5)
- தேவனுக்கு முன்பு தம்மைத் தாழ்த்தி ஏற்படுத்திக் கொண்ட சகவாசம்

இத்தகைய வாசனையால் கடவுளின் சிந்தை மாறி, மனஸ்தாபப்பட்டார் என்று பார்க்கிறோம்.

**அன்பு தம்பி தங்கையே, கடவுளால் பிரித்தெடுக்கப்பட்ட நாம் அனைவருமே அவரால் பிரதிஷ்டைப் பண்ணப்பட்ட ஊழியர்கள். நம் அன்றாட வாழ்வு முறையே நாம் செய்யும் சிறந்த ஊழியமாகும். அது அன்பின் ஊழியம் (கலா.5:13), அது ஒப்புரவாகுதலின் ஊழியம் (2கொரி. 5:18), அது நீதியைக் கொடுக்கும் ஊழியம் (2கொரி. 3:9). இத்தகைய ஊழியத்தை நாம் அனுதின வாழ்விலே யோனாவைப் போல அசதியாய் சுயநீதியோடு, சுயசித்தத்தோடு, சுயநலத்தோடு செய்யாமல் மற்றவர்களைக் குறித்த பாரத்தோடு செய்யும்போது அமோக விளைச்சல் என்ற ஆத்ம அறுவடையைப் பெற முடியும் என்பதில் சந்தேகமில்லை. "கர்த்தருடைய வேலையை அசதியாய் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்" (எரேமியா 48:10).**

(5-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ரகசியம்: அத கூட தாங்கிக்கிடலாம் டா. ஆனா ஆராதனை புக்ல வர ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்பதை மாத்தி சாராளின் தேவன், ரெபேக்காளின் தேவன், ராகேல் லேயாளின் தேவன்னு மாத்தி வாசிக்கச் சொல்றாங்க.

(மூவரும் விழுந்து, விழுந்து சிரிக்கிறாங்க)

சத்தியன்: டேய்! உன் நிலைமையை நினைச்சா ரொம்ப பரிதாபமாயிருக்குடா!

சாதுரியன்: ஒழுங்கா பைபிள் சொல்லிக் கொடுத்திருந்தா, உனக்கு இந்த நிலமை வந்திருக்குமா. நீ என்னடான்னா 3 குறிப்பு சொல்லிட்டு 15 நிமிஷத்துல முடிக்கிறதுல குறியாயிருக்க.

விஷயம்: உங்க பஞ்சாயத்த பிறகு வைச்சுக்கலாம். முதல்ல சாராளின் தெய்வத்தை டீல் பண்ணலாம். டேய் சத்தியன் 5 ஆகமத்தில் பெண்களுக்கான முக்கியத்துவம் ஏதாவது இருக்கா.

சத்தியன்: இருக்கே சொல்றேன் கேள்! நானே app எடுத்து வாசிக்கிறேன் கேளு. யாத். 19:3ல "மோசே தேவனிடத்திற்கு ஏறிப்போனான்; கர்த்தர் மலையிலிருந்து அவனைக்கூப்பிட்டு: நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால்" இந்த வசனத்துக்கு என்ன அர்த்தம்னு நினைக்கிற. அதாவது "யாக்கோபு வம்சத்தார்" என்பது வனாந்திரத்தில் கூடாரத்திலிருந்த பெண்களைக் குறிக்கும் சொல். அதேபோல "இஸ்ரவேல் புத்திரருக்கு" என்ற சொல் ஆண்களைக் குறிக்கும். வரிசையாகக் கவனித்தால் கற்பனைகளை மோசேயிடம் கொடுத்து, அதை கொடுக்கச் சொன்னது முதலாவது வீட்டிலுள்ள பெண்களிடம் தான். இதை sense of priority என்று கூட சொல்லலாம். யாத். 20:12ல் அப்பா பெயர் முதலில் வரும். லேவி. 19:3ல் அம்மா பெயர் முதலில் வரும். (மூவரும் ரசித்து புன்முறுவலோடு...)

சத்தியன் தொடர்ந்து: இதை தான் சாலொமோன் தனது புத்தகத்தில் (நீதி. 6:20இல்) தகப்பன் கற்பனை, தாயின் போதகம் என்றும், நீதி. 1:8 இல் தகப்பனின் புத்தி, தாயின் போதகம் என்கிறார். அதாவது புரியிற மாதிரி சொல்லனும்னா அப்பாவோட training, அம்மாவோட teaching இருவருக்கும் சமப்பொறுப்பு உண்டு.

சத்தியன் தொடர்ந்து: நீங்க "பெண்களின் விடுமுறை தினம்" கேள்விப்பட்டிருக்கீங்களா. அதாவது, யூத பாரம்பரிய பழக்கத்தின்படி Rosh Chodesh மாதத்தின் முதல் நாள் (சந்திரனின் காலக்கணக்கின்படி new moon day தான் முதல் நாள்) அன்று பெண்கள் வீட்டில் வேலை செய்யமாட்டார்கள். அன்று அவர்களுக்கான நாள். காரணத்தை நான் பிறகு சொல்கிறேன். (எல்லோரும் சாப்பிட்டு முடித்த பிறகு, ஒரு பெண் அவர்களிடம் வந்து, ஐயா உங்க கையை நீட்டுங்க உங்க உள்ளங்கையில ஒரு ஸ்பூன் தேன் ஊத்தரேன்)

விஷயம்: ஏன் அக்கா

பரிமாறிய பெண்: கடைசியா தேன் சாப்பிட்டா நல்லா செரிக்கும் அதுக்குத்தான்

(நாலு பேரும் புன்முருவலோடு கையை நீட்டுகிறார்கள்)

(அடுத்த மாதம் வேறொரு கடையில் சந்திப்போம்)



# நான் ஏன் பைபிள் படிக்க வேண்டும்?



Mrs. Jeba Saral

Hi நண்பர்களே, போன தடவ ஏன் church-கு போகவேண்டும் என்பதை பற்றி பார்த்தோம், இந்த தடவை, நான் இயேசுவை அறிந்தவன். அப்புறம் ஏன் நான் தினமும் பைபிள் வாசிக்கனும்? என்பதைக் குறித்து பார்க்கலாம்.

நான் கேலண்டர்ல அந்தந்த டேட்டுக்கு கீழே இருக்கும் வசனத்தை படிச்சா போதாதா? பைபிள் வாசிக்கிறவங்க எல்லாரும் நல்லவங்களாவா இருக்காங்க? அதெல்லாம் எப்பவோ எழுதின outdated புக்! ரீசன்டா எவ்வளவு அறிவுள்ள புக்ஸ் வந்து இருக்குல அக்கா, அதெல்லாம் படிக்கலாமே!!! இப்படி எல்லாம் நீ கேள்வி கேட்கலாம்! ஆனா பரிசுத்த வேதாகமம் என்பது உன் கேள்விகளுக்கு எல்லாம் பதில் கொடுக்கிற ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகளாக இருக்கிறது. இந்த ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை outdated ஆக அல்ல, இக்காலத்துக்கும் ஏற்ற விதமாய் நம்மை வழி நடத்துகிற கருவியாய் இருக்கிறது. **"கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங். 1:2)** என்ற வசனத்தின்படி, நீ அவருடைய வசனங்களை வாசித்து, தியானிக்கும் போது, அந்த வசனங்கள் உன்னோடே பேசும் என்பதில் சந்தேகமில்லை!!

நீ இயேசுவை உன் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டவனாய் இருந்தாலும், தினமும் பைபிள் படித்து தான் ஆக வேண்டும். மேலும் பைபிளை ஒரு முறை full ah படிச்சு முடிச்சிட்டா போதாதா? அதை எதுக்கு நான் டெய்லி படிக்கனும் என்று நீ கேட்கலாம். ஏம்பா, School-ல ஒரு வருஷத்துக்கு நீ படிக்கிற 10 பாடங்களை, 10, 11 தடவை டெஸ்ட் எழுதி பார்த்தால் தான் உனக்கு மனப்பாடமே ஆகுது. அப்புறம் பைபிள் மட்டும் ஒரு முறை படிச்சா அப்படியே மனசுல பதிஞ்சிடுமா? தினம் தினம் வாசிக்கும் போது தான் அந்த வேதத்தின் வசனங்கள் உனக்கு புரியும், உன் இருதயத்தில் பதியும். மேலும், தேவனுடைய வார்த்தைகள், உன் தேவன் யார்? என்பதை உனக்கு சொல்லுகிறதாயிருக்கிறது. உன் தேவன் காற்றை தம் கைப்பிடியில் அடக்கி வைக்கிறார் என்றும், செங்கடலை இரண்டாக பிரித்தார் என்றும் நீ வேதத்தை படிக்காவிட்டால் உனக்கு எப்படி தெரியும்? நீ ஒரு smart watch வாங்கினால், அதனுடைய features, அதை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை அதனுடைய manual பார்த்து தான், நீ தெரிந்துக் கொள்ள முடியும். அது போல தான் தேவன் யார் என்பதை அவருடைய manual ஆகிய பைபிளை வாசிக்கும் பொழுது தான் உனக்கு புரியும்.

அடுத்ததாக நீ யார், உன்னுடைய குறைகள் என்ன என்பதை சுட்டிக்காட்டும் கண்ணாடியாய் பைபிள் இருக்கிறது (யாக். 1:23, 24). அது உன் வாழ்வின் நோக்கம் என்ன, தினமும் நீ எப்படி நடக்க வேண்டும் என்பதை உணர்த்தும் ஒரு வழிகாட்டியாய் இருக்கிறது. தினமும் அதை வாசிக்கும் பொழுது, நீ உனக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் ஓட அது உன்னை வழிநடத்தும் ஒரு ஜீவ வழியாய் இருக்கிறது. **"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது"** (சங். 119:105). தினம் தினம் நீ எதிர் நோக்கும் எல்லா பிரச்சனைகளையும், சவால்களையும் மேற்கொள்ள உதவும் புது பலனாய் இருக்கிறது. **"உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால், என் துக்கத்திலே அழிந்துபோயிருப்பேன்"** (119: 92) என்று தாவீது கூறுகிறார். சில நேரங்களில் நீ குழப்பத்தோடு, கோபத்தோடு இருக்கும்பொழுது சற்று நேரம் பைபிளை படித்து தியானித்தால், உன் குழப்பங்கள் மற்றும் கருத்து வேறுபாடுகளிருந்து விடுதலையும், அதன் பின் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஜீவன் உள்ள தேவன், தன் ஜீவ வார்த்தைகளால் உன்னோடு பேச வல்லவராயிருக்கிறார்! நீ அதை விசுவாசித்தால், அது உனக்கு அப்படியே நடக்கும்!! அவருடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு! ஆமென்.

கடைசியாக, **கிரியைகளில்லாத விசுவாசம் செத்ததாய் இருக்கிறது** (யாக்கோபு 2:20). எனவே வேதத்தை மாத்திரம் படித்துவிட்டு, அதன்படி நீ செய்யாவிட்டாலும், நீ பைபிள் படித்து பிரயோஜனம் இல்லை!! அதனால் தினம், தினம் தேவனிடம், அவருடைய வார்த்தைகளைப் பின்பற்ற உன்னத பெலனைப் பெற்றுக் கொண்டு, வேதத்தைப் பற்றிக்கொண்டு, அதனைப் பின்பற்ற முயற்சித்து, உன் ஓட்டத்தை ஓடு. நிச்சயம், பரலோகத்தில் நாம் அவரை மீட் பண்ணலாம்!! அல்லேலூயா!!

# இராஜஸ்தான்

FIELD - FMPB
Mrs. Vasanthi Emmanuel

இராஜஸ்தான் மாநிலம் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் அமைந்துள்ளது. இராஜஸ்தான் என்றால் அரசர்களின் தேசம் "Land of Kings" என்று பொருள்படும்.

- 1949ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் தேதி இராஜஸ்தான் தனி மாநிலமாக உருவானது.
- பரப்பளவில் மிகப்பெரிய மாநிலம், மக்கள் தொகையில் ஏழாவது பெரிய மாநிலம். இந்தியாவின் முக்கிய பாலைவனமான தார்பாலைவனம் இங்குள்ளது.
- இம்மக்களின் முக்கியத் தொழில் விவசாயம்.
- இராஜஸ்தான் மக்களின் ஆடைகள் கண்ணாடி மற்றும் எம்பிராய்டரி வேலைப்பாடுகளோடு அமைந்திருக்கும்.
- இம்மாநிலத்தில் புஷ்கர் என்ற இடத்தில் பிரம்மாவிற்கு பிரசித்தி பெற்ற கோயில் உள்ளது. கார்த்திகை மாதத்தில் பல இலட்சக்கணக்கான மக்கள் இந்தியா முழுவதிலுமிருந்து இங்கு புனித யாத்திரை செல்கின்றனர். அநேக சமண கோயில்களும் இங்குண்டு. இம்மக்கள் சிவா, கிருஷ்ணன், துர்கா, தேவ்நாராயணன் ஆகியவைகளைத் தெய்வங்களாக வழிபடுகின்றனர். குஜார் சமூகத்தினர் சூரியனை வழிபடுகின்றனர். மேலும் மீராபாய், ராம்தேஜி, பாபாராம்தேவ்ஜி போன்ற பிரபலமான துறவிகளைப் பின்பற்றுகின்றனர்.

**நமது ஊழியம்:** இராஜஸ்தான் மாநிலத்தில் 24.10.1974இல் முதல் பணித்தளம் ஹனுமன்காரில் ஆரம்பிக்கப்பட்டது. நமது முன்னோடி ஊழியர்கள் திரு. கொர்சோம், திரு. ஜிம்சன் மற்றும் திரு. துரைராஜ் இவர்கள் முதலில் ஹனுமன்காரில் சுவிசேஷம் அறிவிக்க சென்றனர். பல கிராமங்களுக்கு சென்று கைப்பிரதிகள் கொடுத்தும், இயேசு திரைப்படம் காண்பித்தும் சுவிசேஷத்தை அறிவித்தனர். 1981ஆம் ஆண்டு வரை ஒரு ஆத்துமா கூட கிடைக்கவில்லை. 1982ஆம் ஆண்டு 12 பேர் தேவனுடைய மந்தையில் இணைந்தனர். 1988ஆம் ஆண்டு லகுவாலி என்ற கிராமத்தில் சுவிசேஷம் அறிவித்தபோது திரு. மோகன்சிங் மற்றும் அவரது மகன்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு 1989ஆம் ஆண்டு மந்தையில் இணைந்ததோடு, அந்த கிராமத்தில் ஆலயம் கட்ட தங்களது நிலத்தையும் தானமாகக் கொடுத்தனர். 5.5.1991இல் அங்கு முதல் தேவாலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டைச் செய்யப்பட்டது.

1980ஆம் ஆண்டு திருமதி. லீலா கிறிஸ்டோபர் மற்றும் 1990ஆம் ஆண்டு திரு. எட்வர்ட் ஞானமுத்து ஆகிய நம் ஊழியர்கள் கோதுமை மணிகளாக மரித்தனர். சுவிசேஷத்திற்கு கடினமான மாநிலமாக இருந்தாலும் நமது ஜெபங்களைக் கேட்டு தேவன் ஆத்தும அறுவடையைத் தந்து வருகிறார்.

**இன்று...**

10 மாவட்டங்கள், 11 பணித்தளங்கள், 17 மக்களினங்கள் மத்தியில் 25 மிஷனெரிகள், 62 சபைகள் மற்றும் 4 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன, 13 சுதேச ஊழியர்கள் ஊழியம் செய்து வருகின்றனர். இதுவரை 5,534 பேர் மறுமலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர்.

**சந்திக்கப்பட்டு வரும் மக்களினங்கள்:** மஜ்பி சீக், யாதவ், ஷர்மா, ராய் சீக், ராம்தாசியா சீக், நட், ஜாட் சீக், ஓட் ராஜ்புத் மற்றும் பஞ்சாபி சீக்.

**ஜெபிக்க:**

- ★ பால்ய திருமணம், போதைப்பொருள், குடும்பங்களில் வன்முறை, தீண்டாமை, இன வேறுபாடு, பெண் சிசுக்கொலை போன்ற சமுதாய சீர்கேடுகள் மறைய
- ★ இம்மாநிலத்தில் சுவிசேஷத்திற்கு எதிராக செயல்படும் மக்கள் மனந்திரும்ப
- ★ நமது விசுவாசி குர்மித்சிங்கை 20.10.2024 அன்று ஆழ்வார் பணித்தளம் குருத்வாராவில் உள்ளவர்கள் ராய் சீக்கிய சமூகத்திலிருந்து வெளியேற்றினர். இந்த மக்கள் மனந்திரும்ப
- ★ ஆழ்வார் பகுதியில் எதிர்ப்பு தெரிவித்து வரும் ஓட் ராஜ்புத் சமூகத்தைச் சேர்ந்த பகிரத் சமாஜ் அமைப்பினர் எதிர்ப்பைக் கைவிட்டு சுவிசேஷத்தை அறிந்து ஆண்டவரை ஏற்றுக்கொள்ள
- ★ நம் சபைகளுக்குச் சென்று விசுவாசிகளையும், சுதேச ஊழியர்களையும், மிஷனெரிகளையும் பயமுறுத்தி வரும் சி.ஐ.டி. காவலர்கள் மனந்திரும்ப
- ★ ஆண்டவரை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டும் நட் மற்றும் ரெய்கர் சமுதாய மக்கள் கிறிஸ்துவை முழு மனதுடன் ஏற்றுக்கொள்ள
- ★ இங்குள்ள 50 மாவட்டங்களிலுள்ள 8.22 கோடி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட / இப்பகுதியில் தேவையான ஊழியர்கள் மற்றும் சுதேச ஊழியர்கள் எழும்ப ஜெபிப்போம்.



Ms. Beulah Baskar

# கழுகுகளின் நாடு

# அல்பேனியா

ALBANIA



அல்பேனியா தென்கிழக்கு ஐரோப்பாவில் உள்ள ஒரு நாடு. இது Balkan Peninsula-வில் அமைந்துள்ளது. அட்ரியாடிக் மற்றும் அயோனியன் கடற்கரைகளைக் கொண்டுள்ளது. அல்பேனியா என்பதற்கு அவர்கள் மொழியில் "ஷ்கிபீரியா" என்று பெயர். இதன் பொருள், அல்பேனிய மொழியில், 'Shqipëria' என்பது 'கழுகு' என்று பொருள்படும், எனவே 'Shqipëria' என்பது 'கழுகுகளின் நாடு' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

தேசிய சின்னம்: இரட்டைத் தலை கழுகு அல்பேனியர்களுக்கு ஒரு வலுவான தேசிய அடையாளமாகக் கருதப்படுகிறது.

வரலாற்று தொடர்பு: இந்த சின்னம் 15ஆம் நூற்றாண்டின் அல்பேனிய வீராங்கனை ஸ்கந்தர்பெக்கிலிருந்து தோன்றியதாக நம்பப்படுகிறது, அவர் ஒட்டோமான் பேரரசுக்கு எதிரான கிளர்ச்சியின் போது தனது கொடியில் இரட்டைத் தலை கழுகைப் பயன்படுத்தினார்.

வரலாறு: அல்பேனியா என்ற பெயர் தற்போதைய மத்திய அல்பேனியாவில் வாழ்ந்த அல்பனோய் பழங்குடியினரிடமிருந்து வந்தது. இந்த நாடு முன்னர் இல்லிரியா என்று அழைக்கப்பட்டது.

புவியியல்: அல்பேனியாவின் தலைநகரம் டிரானா. இந்த நாட்டை அல்பேனியா Alps மலைகள் கடக்கின்றன. அல்பேனியாவில் பல அரண்மனைகள் மற்றும் தொல்பொருள் தளங்கள் உள்ளன.

கலாச்சாரம்: அதிகாரப்பூர்வ மொழி அல்பேனியன், இது கிட்டத்தட்ட 98% மக்களால் பேசப்படுகிறது. அல்பேனியாவில், 'இல்லை' என்பதற்கு ஆம் என்பதைப் போலவும், 'ஆம்' என்பதற்கு இல்லை என்பதைப் போலவும் தலையை ஆட்டுகிறார்கள்.

பொருளாதாரம்: அல்பேனியா ஐரோப்பாவின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும். அல்பேனியா ஒரு வளரும் / வளர்ந்து வரும் உயர்-நடுத்தர வருமானமுள்ள நாடாகும்.

மதம்: அல்பேனியா அதிகாரப்பூர்வ மதம் இல்லாத ஒரு மதச்சார்பற்ற நாடு. இங்கு பொதுவான மதமாக முதல் இடத்தில் இஸ்லாம், பிறகு கிறிஸ்தவம் காணப்படுகிறது. 2023ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, அல்பேனியாவில் 16% மக்கள் கிறிஸ்தவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் கத்தோலிக்கர்கள், ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவர்கள் மற்றும் சுவிசேஷகர்கள் அடங்குவர்.

அரசு: எடி ராமா அல்பேனியாவின் பிரதமரான இவரது சோசலிஸ்ட் கட்சி 2013ல் மகத்தான வெற்றியைப் பெற்று, எட்டு ஆண்டுகால பழமைவாத ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தது.

ஜெபக்குறிப்பு:

- ♣ இத்தேசத்தின் மொத்த மக்கள்தொகையில் 51% மக்கள் முஸ்லிம்களாகவும், 17% மக்கள் மதச்சார்பற்றவர்களாகவும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். மீதமுள்ள 16% மக்கள் தங்கள் மதத்தைக் குறிப்பிடவில்லை. இந்த ஜனம் இயேசுவே உண்மையான தெய்வம் என்பதை அறிந்து கொண்டு தங்கள் நிர்விசாரங்களிலிருந்து மனந்திரும்பி நித்தியஜீவனுக்கேற்ற வாழ்வு வாழ ஜெபிப்போம்.
- ♣ இங்குள்ள பிற மதக் குழுக்களான பெக்தாஷி, இஸ்லாமிய சூபி, பஹாய் நம்பிக்கை, யெகோவாவின் சாட்சிகள் போன்ற பிரிவுகளைப் பின்பற்றும் மக்கள் மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- ♣ இங்குள்ள கிறிஸ்தவப் பிரிவுகளான புராட்டஸ்டன்ட் பிரிவுகள், பிந்தைய நாள் புனிதர்களின் சபை, இயேசு கிறிஸ்துவின் தேவாலயம், யூதர்கள், கத்தோலிக்கர் போன்ற பிரிவுகளிலுள்ள ஜனங்கள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ்ந்து, பிறரை பரலோக பாதையில் வழிநடத்துபவர்களாக, பாரத்தோடு ஆத்தும ஆதாயம் செய்ய ஜெபிப்போம்.
- ♣ இத்தேசம் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் நாடாக கருதப்பட்டாலும், இது ஏழ்மை நாடுகளில் ஒன்றாகத் தான் குறிப்பிடப்படுகிறது. இந்நிலை மாறி மக்கள் அனைவரின் அன்றாட தேவைகள் சந்திக்கப்பட்டு, கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் செழிப்பான வாழ்வு பெற ஜெபிப்போம்.



# மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

Rev. C. ஆசீர் செல்வராஜ், தென்காசி



**ஊழிய அழைப்பும், அர்ப்பணிப்பும்:**

தென்காசி மாவட்டம் புலவனூர் கிராமத்தில் நான் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தேன். 1982ல் நாசரேத் ஊரில் ITI படித்துக் கொண்டிருக்கும் நாட்களில் இயேசுவை நான் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன். FMPB வாலிபர் கூடுகையில் திரு. ஸ்டேன்லி பிரின்ஸ் அண்ணன் தேவசெய்தி அளித்தார்கள். ஏசாயா 6:8லுள்ள வசனத்தின்படி தேவவார்த்தைக்கு கீழ்படிந்து முழுநேர ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்தேன். நாட்கள் கடந்தன, FMPB ஜெபக்குழு தலைவர்கள், ஜெப நண்பர்கள் ஆவிக்குரிய ஆலோசனைத் தந்து ஊழியத்திற்கு செல்ல என்னை ஊக்கப்படுத்தினார்கள். 1988ல் திரு. ஞானக்கண் செல்வராஜ் அண்ணன், திரு. பால்துரைசாமி அண்ணன் அவர்கள் எனக்காக ஜெபித்தார்கள். பின்பு FMPBல் இணைந்து வட இந்திய மிஷனெரியாக அனுப்பப்பட்டேன்.

**வட இந்திய பணித்தள ஊழியம்:**

குஜராத் மாநிலத்தில் 3 மாதங்கள் FMPB Jeep Team-ல் இணைந்து சந்திக்கப்படாத அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க கர்த்தர் கிருபை செய்தார். கேவடி பணித்தளத்தில் (குஜராத் 1990-1993) வசாவா இன மக்கள் மத்தியில் 4 ஆண்டுகள் பணியாற்றி, விசுவாசத்தில் பின்மாற்றம் அடைந்த நபர்களை அடையாளம் கண்டு கிறிஸ்துவுக்குள் வழிநடத்த கர்த்தர் கிருபை செய்தார். 1991-ஆம் ஆண்டு FMPBல் மிஷனெரியாக பணியாற்றி வந்த மார்கரெட் ஜோதிமணியை தேவன் திருமண பந்தத்தில் என்னுடன் இணைத்தார். சைக்கிள் மூலம் பல கிராமங்களுக்குச் சென்று ஊழியம் செய்து மக்களைக் கிறிஸ்துவண்டை வழிநடத்த தேவன் கிருபைச் செய்தார். உச்சல் & நவாப்பூர் (1993-1998) இப்பணித்தளத்தில் 35 இடங்களில் ஆராதனைக் குழுக்கள் உருவாக்கவும், எட்டு ஆலயங்கள் கட்டவும், 5000 பேர் கிறிஸ்துவின் மந்தையில் இணைக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். 1997-ல் வசாவா விசுவாசிகளின் பிள்ளைகள் படிப்பதற்கு Wakipada-வில் சிறுவர் விடுதியும், 1999ல் புதிய பணித்தளம் தகிவேல் (விசர்வாடி) என்ற இடத்தை மையமாக வைத்தும் தொடங்கினோம். பின்பு இங்கு 6 புதிய ஆராதனைக்குழுக்கள் ஆரம்பிக்க கர்த்தர் கிருபைச் செய்தார். 2002ல் சின்ச்பாடா (Chinchpada)வை மையமாக வைத்து வசாவா பிள்ளைகளுக்காக FMPB மூலமாக English Medium Hostel-ம் ஆரம்பித்தோம். இங்கு படிக்கும் பிள்ளைகள் மிஷனெரி ஊழிய தரிசனத்தோடு வளர்ந்து, மிஷனெரிகளாக, சுதேச ஊழியர்களாக நமது இயக்கத்தில் இணைந்து பணியாற்ற கர்த்தர் கிருபைச் செய்தார்.

**ஊழியத்தின் சவால்கள்:**

நாங்கள் பஸ்ஸில் குடும்பமாக ஊழியத்திற்கு சென்றபோது கனரக வாகனம் ஒன்று எங்கள் பஸ் மீது நேருக்கு நேர் மோதியதில் 6 பேர் இறந்துவிட்டனர். கர்த்தர் அதன் மத்தியிலும் சிறிய காயங்களுடன் எங்களைக் காப்பாற்றினார். நாங்கள் செய்த ஊழியங்களில் ஆலய தகர்ப்பு, போலீஸ் கேஸ், அநேக இழப்புகள், போராட்டங்கள் மற்றும் எதிர்ப்புகள் மத்தியில் விசுவாசத்தில் குறையாமல் 19 ஆண்டுகள் வட இந்திய பணித்தளத்தில் ஊழியத்தில் உற்சாகத்தோடு செயல்பட ஆண்டவர் எங்களைப் பயன்படுத்தினார்.

**வட இந்திய / தென்னிந்திய முன்னேற்றப்பணி ஊழியங்கள்:**

நாங்கள் 2007ல் புனேக்கு (Pune) மகாராஷ்டிரா முன்னேற்றப்பணி ஊழியத்திற்காக அனுப்பப்பட்டோம். இதில் எந்த அனுபவமும் இல்லாததால் எப்படி செய்வதென்று திணறினோம். இந்த சூழ்நிலையில் நமது இயக்கத்தின் பொது செயலர் (General Secretary) அவர்கள் யோசுவா 1:9 என்ற வசனத்தை கோடிட்டு, ஊழியத்தை செய்ய என்னை உற்சாகப்படுத்தி, ஆலோசனைகள் கொடுத்து கடிதம் அனுப்பினார்கள். மேலும் அனைத்து தலைவர்கள், தலைவிகள் இவ்ஊழியத்தைச் செய்வதற்கு முழு ஒத்துழைப்பு தந்து உதவி செய்தார்கள். பின்பு ஆண்டவர் எங்களுக்கு இப்பணியை ஆர்வத்துடன் செய்ய பெலன் தந்து வழிநடத்தினார். இங்கு ஜெபக்குழு தலைவர்கள், ஜெபக்குழுக்கள், பெண்கள் கூடுகை, தலைவர்கள் கூடுகை, வருடாந்திர கூடுகை, கிறிஸ்துமஸ் கீதப்பவனி, திட்டக் கூடுகைகள் மற்றும் பணித்தள விஜயம் போன்றவைகளை நடத்தவும், Children Sponsors, Missionary Sponsors, Church Sponsorsயைக் கண்டுபிடிக்கவும் கர்த்தர் கிருபைச் செய்தார். 2013ல் எனது மனைவி நிமோனியாவால் தாக்கப்பட்டு மரிக்கும் தருவாயிலிருந்தபோது அநேகர் ஜெபித்ததால் கர்த்தர் அவருக்கு அற்புத சுகத்தைக் கட்டளையிட்டார். 24.10.12 பூனே முன்னேற்றப்பணி Silver Jubilee கொண்டாடவும், அனைத்து மிஷனெரிகள் மற்றும் Sponsors கௌரவிக்கப்படவும், 2018ல் முதன் முதலாக மகாராஷ்டிராவில் பன்வெல் என்னுமிடத்தில் மகாராஷ்டிரா மாநில முகாம் பெரிய அளவில் நடக்கவும் தேவன் கிருபைச் செய்தார்.

2022-ல் தென்காசி முன்னேற்றப்பணிக்கு மாற்றப்பட்டேன். இது 5 பணி மாவட்டங்களை உள்ளடக்கிய பகுதியாகும். இங்கு கொரோனாவினால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஜெபக்குழுக்களை மீண்டும் ஆரம்பிக்கவும், பணித்தளங்களைப் பார்வையிடவும் கர்த்தர் கிருபைச் செய்தார். இந்நாட்களில் எனக்கு Spinalcard Operation செய்து 5 மாதங்கள் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு ஆண்டவர் பூரண சுகமருளினார். மேலும் எங்களது மகளின் சரீர பலவீனத்தின் நிமித்தம் ஏற்பட்ட வேதனைகளிலும் கர்த்தர் எங்களை ஆறுதல்படுத்தி தொடர்ந்து அவரது பணியைச் செய்ய எங்களை உற்சாகப்படுத்தி வருகிறார்.

**அன்பு வாலிப பிள்ளைகளே! அழிந்து கொண்டிருக்கும் ஆத்துமாவை மீட்கும் உன்னத பணியைச் செய்ய நீங்கள் முன்வருவீர்கள் என்றால், தேவன் இவ்வூழியத்தில் உங்களை வல்லமையாய் பயன்படுத்துவார் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஜெபியுங்கள்!**

**ஜெபக்குறிப்புகள்:**


- ♥ அண்ணனுடைய முன்னேற்றப்பணி ஊழியங்களுக்காக / குடும்பத்தினருக்காக / சுகத்திற்காக
- ♥ வாலிபர்கள் மிஷனெரிகளாக எழும்ப / இரண்டாம் கட்ட தலைவர்கள் கிடைக்க
- ♥ நம்முடைய Childrens Home-ல் படிக்கும் மாணவ / மாணவிகள் மிஷனெரி தரிசனத்தோடு வளர ஜெபியுங்கள்.

Dr. Godwin Issac & Dr. Azubha Jenilet

# இயக்க இயலாமைக் குறைபாடு

LOCOMOTOR DISABILITY





STEPHEN HAWKING



NICK VAUJICIC



AARON FOTHERINGHAM

இயக்க இயலாமை என்பது தசைகள், எலும்புகள், மூட்டுகள் அல்லது நரம்பு மண்டலத்தில் உள்ள பிரச்சனைகளின் காரணமாக ஒரு நபர் தானாகவே நகரும் திறனைப் பாதிக்கும் ஒரு நிலை. இது பெரும்பாலும் பிறவியிலேயோ அல்லது காயங்கள், போலியோ அல்லது பெருமூளை வாதம் போன்ற நோய்கள் அல்லது வயது தொடர்பான வாதம் போன்றவற்றால் ஏற்படலாம். இயக்க குறைபாடு உள்ளவர்கள் நடக்கவோ, நிற்கவோ அல்லது தங்கள் கைகால்களைப் பயன்படுத்தவோ சிரமப்படுகிறார்கள். இவர்கள் பெரும்பாலும் சக்கர நாற்காலிகளை, ஊன்றுகோல்களை அல்லது மற்றவர்களையே நம்பியுள்ளனர். முதுகெலும்பு பைஃபிடா, தசைச் சிதைவு, முதுகெலும்பு பாதிப்பு, எலும்பு முறிவுகள், உறுப்புச் சிதைவு, கீல்வாதம், போலியோ, பெருமூளை வாதம், பக்கவாதம், மல்டிபிள் ஸ்களீரோசிஸ், ஏ. எல். எஸ் மற்றும் பார்கின்சன் நோய் ஆகியவை இயக்க இயலாமைக்கு சில பொதுவான காரணங்களாகும்.

இயக்க இயலாமையால் பாதிக்கப்பட்ட போதிலும் தன்னுடைய வாழ்க்கையின் சாதனைகளால் வெற்றி பெற்று, உலகத்தால் நன்கு அறியப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு முன்மாதிரியாக இருக்கும் சில பிரபல நபர்களைக் கீழே காணலாம். இவர்கள் தன் கனவுகளை அடைவதை ஊனத்தால் தடுக்க முடியாது என்பதை நிரூபித்துள்ளனர்.

### ஸ்டீபன் ஹாக்கிங் (Stephen Hawking)

ஸ்டீபன் ஹாக்கிங், இவருடைய 21வது வயதில் அமியோட்ரோபிக் லேட்டரல் ஸ்க்லெரோசிஸின் (A.L.S) என்ற வியாதி இருப்பதாக கண்டறியப்பட்டது. ஆனாலும் கோட்பாடு இயற்பியல் மற்றும் அண்டவியல் துறையில் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவராக இருந்தார்.

### நிக் வுஜிசிக் (Nick Vujicic):

1982ஆம் ஆண்டில் கைகள் மற்றும் கால்கள் இல்லாமல் பிறந்த நிக், டெட்ரா-அமேலியா என்ற நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டார். உடல் ஊனமுற்றவர்களுக்கு உதவும் 'Life without Limbs' என்ற அமைப்பை நிறுவியதால் இவர் பிரபலமானார். நிக் தனது இயலாமையைப் புரிந்துக் கொண்டு, மற்றவர்களை உற்சாகப்படுத்தும் புகழ்பெற்றப் பேச்சாளரானார், கலந்துரையாடல் பேனல்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் தவறாமல் தோன்றினார்.

### ஆரோன் ஃபோதரிங்ஹாம் (Aaron Fotheringham)

ஆரோன் 'வீல்ஸ்' ஃபோதரிங்ஹாம் ஒரு ஊக்கமளிக்கும் மற்றும் திறமையான விளையாட்டு வீரர். ஸ்கேட்டரில் தீவிர விளையாட்டு வீரர். இவர் அவருடைய திறமையால் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறார். ஆரோன் ஸ்பினா பிஃபிடாவுடன் பிறந்தார், அவர் ஒரு இளைஞனாக இருந்தபோது, அவரால் நடக்க முடியாமல் சக்கர நாற்காலியைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. 2006ஆம் ஆண்டில், இவர் தனது சக்கர நாற்காலியில் இருந்தபோது பேக்ஃப்ளிப்பை வெற்றிகரமாக பின்னோக்கி தரையிறக்கி வரலாறுப் படைத்தார். 2011ஆம் ஆண்டில், நியூசிலாந்தில் முதல் சக்கர நாற்காலி ஃப்ரண்ட்ஃபிளிப் செய்து தரையிறக்கினார்.

### புள்ளிவிவரங்கள்:

2019 மற்றும் 2021க்கு இடையில் நடத்தப்பட்ட தேசியக் குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு-5 (NFHS-5) இன் சமீபத்திய ஆய்வின்படி,

- இவற்றில் இயக்க இயலாமைக் குறைபாடு 44.73%.
- இயக்க இயலாமைக் குறைபாடு பெண்களை விட ஆண்களிடயே (வயதுக்கு ஏற்ப அதிகரிகிறது), அதிகமாக உள்ளது.
- 60 முதல் 74 வயதுடையவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.
- அதிகபட்சமாகத் டெல்லியில் (Delhi) 58.5% பாதிக்கப்பட்டுள்ளனர்.

### ஜெபக்குறிப்புகள்:

- இயக்க இயலாமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலி குறைய, ஊக்கமின்மை, மன சோர்வு போன்றவற்றிலிருந்து விடுதலைப் பெற
- இயக்க இயலாமைக் குறைபாடு உள்ளவர்களுக்கு பொது இடங்கள், பணியிடங்கள் மற்றும் போக்குவரத்தில் சிறந்த அணுகல் கிடைக்க.
- இயக்கத்தை மேம்படுத்த மருத்துவம் (மூட்டு மாற்று மற்றும் நரம்பு அறுவை சிகிச்சை) சிகிச்சை (பிசியோதெரபி மற்றும் தொழில் சிகிச்சை) மற்றும் உதவி தொழில்நுட்பம் (வளைவுகள் மற்றும் லிஃப்ட்) ஆகியவற்றின் முன்னேற்றங்களுக்காக
- குடும்பங்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் இவர்களை ஆதரிக்க பொறுமை, அன்பு போன்றக் குணங்களைக் கடவுளிடமிருந்து பெற்றுக்கொள்ள
- இயக்க இயலாமைக் குறைபாடு உள்ளவர்களை ஆதரிக்கும் மற்றும் மேம்படுத்தும் கொள்கைகள் மற்றும் திட்டங்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட ஜெபிப்போம்.

# பஹாரி கொர்வா (எ) மலை கொர்வா மக்கள்





இந்தியாவில் 25%க்கும் குறைவான கல்வியறிவு கொண்ட மக்கள் கூட்டங்கள் பல உள்ளன என்பது உங்களுக்குத் தெரியுமா? அதாவது பஹாரி கொர்வா மக்களின் கல்வியறிவு விகிதம் வெறும் 22-23% மட்டுமே.

**மக்கள்தொகை விவரம்:**

கொர்வா மக்கள்தொகையில் பெரும்பான்மையானவர்கள் 129,429 வடகிழக்கு சத்தீஸ்கரில் வாழ்கின்றனர். 35,606 மக்கள் தொகையுடன் மேற்கு ஜார்க்கண்டில் கணிசமான சிறுபான்மையினர் வாழ்கின்றனர். இவர்களின் வாழ்விடம் மலைப்பாங்கான, காடுகள் நிறைந்த பகுதியாகும். இவர்கள் நான்கு மக்களினங்களாக அகரியா கொர்வா, டேம் கொர்வா, திஹ் கொர்வா (நிரந்தர விவசாயத்தைத் தொடங்கி கிராமங்களில் நிரந்தர வீடுகளைக் கட்டத் தொடங்கிய குழு), பஹாரி கொர்வா (வேட்டையாடியும், காட்டில் விளையும் பொருட்களைச் சேகரித்து வரும் ஒரு குழு). 2005-06ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின்படி, பஹாரி கொர்வா பழங்குடியினரின் மொத்த மக்கள் தொகை 34,122 ஆகும்.

**மொழி / மதம்:**

கொர்வா பழங்குடியினரான மலை கொர்வா மக்கள், குறைந்த கல்வியறிவு மற்றும் தேக்கமான மக்கள் தொகை ஆகியவற்றின் அடிப்படையில் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் (PVTGs) என அடையாளம் காணப்படுகிறார்கள். இவர்கள் ஆஸ்ட்ரோ-ஆசிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கொர்வா மக்களில், மலை கொர்வா மக்கள் மட்டுமே இன்னும் தாய் மொழியைப் பேசுகிறார்கள். மற்றவர்கள் பிராந்திய மொழிகளுக்கு மாறிவிட்டனர். மலை-கொர்வா பழங்குடியினரின் மதம் மூதாதையர் வழிபாட்டுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. குல்தேவி (தலைமை தெய்வம்) மாதா குடியாராணி (Khudia Rani) ஆவார். **“குடியாராணி கி குஃபா”** என்று பிரபலமாக அழைக்கப்படும் இது, வடக்கு சத்தீஸ்கரிலுள்ள ஜாஷ்பூர் நகரில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஒன்றாகும். கெட்ட ஆவியிலிருந்து தங்களைப் பாதுகாக்க அவர்கள் வணங்கும் தெய்வம் குடியாராணி. அனைத்து தீய சக்திகளையும் தடுக்கும் சக்தி குடியாராணிக்கு இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். அவர்களால் வணங்கப்படும் முக்கிய கடவுள்கள் சிங்கிர் தியோ (பாம்பு கடவுள்) கோரியா தியோ (விலங்கு கடவுள்) மற்றும் மூதாதையர் கடவுள் ஆவர்.

**திருமணம் மற்றும் குடும்பம்:**

திருமண வயது ஆண்களுக்கு 16-20 மற்றும் பெண்களுக்கு 15-18 ஆகும். மணமகன் தரப்பிலிருந்து திருமணம் முன்மொழியப்படுகிறது. திருமணத்தில், தானியங்கள், பருப்பு வகைகள், எண்ணெய், வெல்லம் மற்றும் சில ரூபாய் ஆகியவை மணமகளின் தந்தைக்கு ‘சக்’ (suk) ஆக வழங்கப்படுகின்றன. மலை கொர்வாக்கள் மண் குடிசைகளில் வாழ்கின்றனர், ஒரு மைய அறை மற்றும் சமையலுக்கும் தூங்குவதற்கும் பக்கங்களில் வராண்டாக்கள் உள்ளன. சில வீடுகள் இரண்டு அறைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு அறை ஓடுகள் மற்றும் கூரை கொண்டது. மற்றொரு வகை, கம்பா என்று அழைக்கப்படுகிறது, இது ஒரு சிறிய குடிசை, இது வட்ட வடிவத்திலும், உச்சியில் கூம்பு வடிவத்திலும் உள்ளது. இதில் புல் மற்றும் சால் இலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

**சமூகப் பொருளாதார நிலை:**

அவர்களின் தொலைதூர இருப்பிடம் அரசாங்க திட்டங்கள் மற்றும் நன்மைகளுக்கான அணுகலைத் தடுக்கிறது, இதன் விளைவாக பஹாரி கொர்வாக்கள் சுகாதாரம் மற்றும் கல்வி அறிவில் மிகக் குறைவாகவே உள்ளனர். இவர்கள் காட்டில் விளையும் பொருட்களைச் சேகரித்து சந்தைகளில் விற்கிறார்கள், ஆனால் இன்றைய காலத்தில் நகரமயமாக்கலின் தாக்கத்தால் இவர்கள் விவசாயம் மற்றும் தொழில்துறைகளில் வேலை செய்கிறார்கள். பொருளாதாரரீதியாக பஹாரி கொர்வா குடும்பங்களில் பெரும்பான்மையானவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே உள்ளனர்.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்கள்:**

2008ஆம் ஆண்டு கொர்வா மக்கள் மத்தியில் சத்தீஸ்கர் மாநிலத்தில் ஊழியம் செய்ய ஆரம்பித்தோம். 2011ஆம் ஆண்டு அம்மனாரா என்ற இடத்தில் முதல் திருச்சபை ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுது அங்கு சுமார் 370 விசுவாசிகளும், 5 திருச்சபைகளும் நமக்குண்டு. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**ஜெபிக்கவும்:**

- பஹாரி கொர்வா மக்கள் ஒவ்வொருவருக்கும் இயேசுவின் நற்செய்தி சென்றடைய வேண்டும்
- இம்மக்களுக்கு கல்வி கற்பிக்க அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களுக்காக
- கொர்வா மொழி புதிய ஏற்பாட்டை கொர்வா மக்கள் பயன்படுத்த
- பாரம்பரியமும், நவீன மயமாக்குதலும் சரியாக கையாளப்பட
- சபைகளிலும், விசுவாசிகளிலும் ஆத்தும பாரத்தோடு அநேக மிஷனெரிகள் எழும்ப ஜெபிப்போம்.

Mr. Suriya Kumar

Ms. Lily Reaiah Grace



# Matrimonial Scam

திருமண வலைதளங்களில் (மேட்ரிமோனியல் Apps) பதிவு செய்து காத்திருப்போரை வரன் என்ற பெயரில் அணுகி, நம்ப வைத்து மோசம் செய்யும் இந்த மோசடிக்குப் பெயர் 'மேட்ரிமோனியல் மோசடி'.

**இது எப்படி நிகழ்கிறது?**

ஆன்லைன் டேட்டிங் தளங்கள், திருமண செயலிகளில் போலியான பெயரிலோ அல்லது சொந்த பெயரிலோ கணக்கை உருவாக்கி அதற்கு ஏற்றபடி photos பதிவிட்டு, நல்ல பணியில் உள்ளேன், வெளிநாட்டில் வாழ்கிறேன் என்று போலியான தகவல்களை உருவாக்கி, அதை Verified Profileஆக மாற்றுவார்கள். அப்படி நம்மைவிட எல்லாவிதத்திலும் உயர்ந்தவர் நம்மை தொடர்பு கொண்டு 'interested' என வெளிப்படுத்தியிருப்பதை நினைத்து பலர் சந்தோஷப்படும் நேரத்தில், இது வலை என்று உணர்பவர்கள் வெகு சிலரே. ஒரு profileஐ verify செய்ய இந்த மேட்ரிமோனியல் app கேட்பது புகைப்படத்தையும், வீட்டு முகவரியையும் கொண்ட ஒரு அரசாங்க அடையாள அட்டையை மட்டுமே.

ஒருவரின் Profile லுக்கு விருப்பம் தெரிவிப்பதில் துவங்குகிறது இந்த மோசடி, இவர்கள் தொலைபேசியில் அழைப்பு செய்தால் call recording செய்யப்பட்டு மாட்டிக்கொள்வர் என்பதால் International அழைப்பு என WhatsAppல் மட்டுமே அழைப்பர். குடும்பத்துடன் பழகி, அவர்களது Personal விசயங்களைத் தெரிந்துகொண்டு தேவைக்காக அவர்களை மிரட்டி பணிய வைப்பது, அவர்களிடம் பணம் பறிப்பது அல்லது சட்ட விரோதச் செயல்களைச் செய்ய நிர்ப்பந்திப்பது என உலகளவில் 'Catfishing' என்ற பெயரில் நிகழ்ந்து வரும் ஒரு பரவலான ஏமாற்று வேலையில் இது ஒரு வகையாகும்.

இதற்காகவே ஒரு தாய், தம்பி ஆகியோரை வாடகைக்கு அமர்த்தி, ஒரு குடும்பம் போல சித்தரித்து இந்த மோசடியை ஒரு குழுவாக நிகழ்த்துகிறார்கள். முதல் குழு மணமகன்/ மணமகள் மற்றும் அவரது குடும்பமாய் நடிக்கும். திருமண நாள் குறித்ததும் இரண்டாவது குழு சுங்கத்துறை, visa அதிகாரி, என்ற பெயரில் ஒரு அவசரத்தை உருவாக்கிப் பணம் கேட்பார்கள்.

**இவர்கள் சொல்லும் பொய்களில் சில:**

1. நீ தான் என் மனைவி என முடிவாகிவிட்டதால், என் குடும்பத்தினரின் அறிவுரையின்பேரில் உனக்காக பரிசுகள் அனுப்புகிறேன் என்று அவன் கூற, உங்கள் மணமகன் உங்களுக்காக விலை உயர்ந்த பரிசுகள் அனுப்பியுள்ளார். அதை பெற்றுக்கொள்ள 24,000/- அனுப்பினால் உங்கள் முகவரிக்கு டெலிவரி செய்து விடுவோம் என்று வேறொருவர் அழைத்து கூறுவார்.
2. நாங்கள் கஸ்டம்ஸ் அதிகாரிகள். உங்கள் மாப்பிள்ளை கொண்டு வந்த நகை, பணம் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகம், அதனால் குடும்பத்தையே கைது செய்யப் போகிறோம்.
3. மருத்துவமனையிலிருந்து பேசுகிறோம்... உங்கள் மாப்பிள்ளை வீட்டார் திருமணத்துக்கு வரும் வழியில் விபத்தில் சிக்கிவிட்டார்கள். சிகிச்சையைத் தொடங்க வேண்டும் என்றால், உடனே பணம் செலுத்துங்கள்.
4. நான் திருமணத்திற்குப் பிறகு இந்தியாவில் செட்டில் ஆக விரும்புகிறேன். எனது வெளிநாட்டுப் பணத்தை உங்கள் கணக்கிற்கு மாற்ற சில நடைமுறைகள் உள்ளன. அதற்கு இந்தியப் பணமாக சில லட்சங்கள் தேவை. அனுப்பினால், திருப்பித் தந்துவிடுகிறேன்.
5. எனது நிறுவனத்தில் என்னை திடீரென்று நீக்கிவிட்டார்கள். உனக்கும் சேர்த்து கிரீன் கார்டுக்கு உடனடியாக விண்ணப்பிக்க வேண்டும். இப்போதைக்கு சமாளிக்க சில லட்சங்கள் தேவை. பிறகு திருப்பித் தந்துவிடுகிறேன்.
6. நான் வீட்டில் இருந்து தான் வேலை செய்கிறேன், நீ தான் என் மனைவி என்று கடவுள் என் கனவில் கூறினார். நாம் நேரில் பார்த்து, பேசி, பழகினால் தான் வருங்காலத்தில் சுமூகமாக குடும்பத்தை நடத்த முடியும் எனக்கு work from home தான் என்பதால் நீ என் வீட்டிற்கு வரலாம், பெற்றோர் இதை எல்லாம் புரிந்து கொள்ள மாட்டார்கள். அதனால் அவர்களிடம் சொல்லாமல் வா என்று வீட்டிற்கு அழைக்கிறவன் எந்த எண்ணத்தில் அழைப்பான்.

ஒருபுறம் பணம் பறிப்பது, மற்றொருபுறம் பெண்களை ஆசை வார்த்தைகள் கூறி அவர்கள் இடத்திற்கு வரவழைத்து நாசம் செய்வது என இந்த மோசடியின் கோர முகங்கள் பல.

**ஜெபக்குறிப்புகள்:**

* இப்படிப்பட்ட மோசடிகளில் ஈடுபடுவோர் உணர்வடைந்து மனம்திரும்ப
* பாதிக்கப்பட்டவர்களின் இதய காயங்களை தேவன் ஆற்றி, ஏற்ற நேரத்தில் ஏற்றத்துணையைத் தந்தருள
* மக்கள் ஞானத்துடனும், விழிப்புடனும் செயல்பட, பாதிக்கப்படுவோர் தயக்கமின்றி அரசின் உதவியை நாடி, மறுவாழ்வு பெற
* காவல்துறை, சைபர் குற்றப்பிரிவு அதிகாரிகள், ஞானத்துடன் விரைந்து வழக்குகளைக் கையாள
* திருமண செயலிகள், வலைதளங்களின் நம்பகத் தன்மையை உறுதி செய்ய தொழில்நுட்ப பாதுகாப்புகள் மற்றும் கடுமையான விதிமுறைகள் இயற்றப்பட ஜெபிப்போம்.



# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

### (நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

## கிரியானப்பள்ளி திருச்சபை வரலாறு

Rev. Ruban Ramalingam

1980ஆம் வருடம் திரு. ஜீவமணி அவர்கள் குடும்பமாக இருதுக்கோட்டை என்ற கிராமத்தில் தங்கி ஊழியம் செய்து வந்தார்கள். அப்பொழுது அதே கிராமத்தில் மருத்துவராகயிருந்த டாக்டர். ஜான்சன் அவர்களின் வழிகாட்டுதலினாலும், கர்த்தருடைய மகா கிருபையினாலும் FMPB ஊழியர்கள் திரு. ஜான் தர்மமணி, திரு. பிலிப்பு ஆசீர்வாதம், திரு. ஜீவமணி குடும்பம் இவர்களால் எங்களுடைய கிராமத்திற்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. மேலும் நாளை பெத்தேல் என்ற இடத்தில் பெரியக் கூட்டம் நடக்கிறது என்றும், இருதுக்கோட்டையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு வீட்டில் வைத்து ஞாயிறு ஆராதனை நடக்கிறது வாருங்கள் என்றும் சொல்லிவிட்டுப் போனார்கள். நாங்களும் உற்சாகமாக வருகிறோம் என்று சொன்னோம். ஆனால் போகவில்லை.

மூன்று மாதத்திற்கு பிறகு நான்கு பேர் ஞாயிறு ஆராதனையில் கலந்துக்கொண்டோம். ஒவ்வொரு வாரமும் எண்ணிக்கைக் கூடிக் கொண்டேவந்தது. நாங்கள் ஞானஸ்நானமும் பெற்றுக்கொண்டோம். மேலும் மிஷனெரி அண்ணன்மார்கள் எங்கள் கிராமத்திலேயே ஞாயிறு ஆராதனையை ஒரு வீட்டில் ஆரம்பித்தார்கள். இங்கு ஒரு பக்கம் விஷ பாம்புக் கடியிலிருந்தும், பேய் பிசாசுகளிலிருந்தும், வியாதிகளிலிருந்தும் விடுதலை போன்ற வல்லமையான அற்புதங்கள் நடந்தாலும், இன்னொரு பக்கம் கிராமத்தில் பயங்கரமான எதிர்ப்புகள் வந்து கொண்டேயிருந்தது. ஆனாலும் விசுவாசிகள் சோர்ந்து போகாமல் பெருகிக்கொண்டே இருந்தார்கள். அதன் பிறகு ஊர் கட்டுப்பாடு என்று சொல்லி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகளின் குடும்பங்களை ஒதுக்கி வைத்துவிட்டார்கள். அப்போதுதான் சில விசுவாசிகள் சோர்ந்து போய் பின்வாங்கிவிட்டார்கள். எங்களுடைய கிராமத்தில் வந்த இந்த எதிர்ப்புகள் FMPBயின் எல்லா இடங்களிலும் பரவியதால், எல்லா ஜெப குழுக்களிலும் ஜெபித்தார்கள். இந்த ஜெபத்தின் பலனாலும், கர்த்தருடைய மகா கிருபையினாலும் பின்வாங்கினவர்களெல்லாம் மறுபடியும் சபைக்கு வர ஆரம்பித்தார்கள். நான் T. பேதுரு முனியப்பா, 15.3.1983ல் சுதேச ஊழியராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். இந்த நேரத்தில் தாமஸ் அண்ணன் அவர்கள் ஊழியத்திலிருந்தார்கள்.

கிரியானப்பள்ளி கிராமத்தில் ஆலயம் கட்ட வேண்டுமென்று திட்டமிட்டார்கள். ஆனால் எதிர்ப்புகளினாலே எவருமே நிலம் கொடுக்க முன்வரவில்லை. அந்த சூழ்நிலையில் எங்கள் தகப்பன் நோவா திம்மராயப்பா அவர்கள் 25 சென்ட் நிலம் கர்த்தருடைய ஆலயம் கட்டுவதற்கென்று நன்கொடையாக கொடுத்தார்கள். அதே இடத்தில் ஆலயம் கட்டி, 10.6.1986ல் பணித்தள இயக்குனரான டாக்டர். சாமுவேல் தேவதாசன் அண்ணன் அவர்கள் மூலம் ஆலயம் திறக்கப்பட்டது. நாளுக்கு நாள் சபை விருத்தியடைந்து, பிள்ளைகள் பட்டப்படிப்புகள் படித்தும், நல்ல வேலையிலும் அமர்ந்தார்கள். இந்த சபையிலிருந்து FMPB ஸ்தாபனத்தில் 8 பேர் முழுநேர பணியாளர்களாக இணைந்து ஊழியம் செய்து வருகிறார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

**துதிக்க:**

* நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயேசுவை அறியாத எங்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்ததற்காக
* சுவிசேஷத்தினால் இக்கிராமத்தில் உண்டான பெரிய சமுதாய மறுமலர்ச்சிக்காக ஆண்டவரைத் துதியுங்கள்.

**ஜெபிக்க:**

* உபத்திரவங்களின் மத்தியிலும், விசுவாசிகள் கர்த்தருக்காக வைராக்கியமாக சாட்சி பகர
* வாலிபர்கள் ஊழியத்தைச் செய்ய முன்வர ஜெபியுங்கள்.

**T. பேதுரு முனியப்பா, FMPB**
**கிரியானப்பள்ளி**



# ஜெபிக்கலாம் வா... VIRAL NEWS





## மஹா கும்பமேளா 2025

பாரத ஜனங்கள் உண்மை தெய்வத்தை கண்டுகொள்ள, இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.



போதை பொருட்களை கடத்தி, சட்டவிரோதமாக வியாபாரம் செய்வோர் மனம்திரும்ப ஜெபிப்போம்.

## பள்ளிகளில் விற்கப்படும் நவீன போதை பொருள்

சிறுப்பிள்ளைகளை போதை பொருளுக்கு அடிமைப்படுத்த நினைக்கும் சத்துருவின் செயல் திட்டங்கள் முறியடிக்கப்பட ஜெபிபோம்.





## மஹா கும்பமேளா 2025 கூட்ட நெரிசலில் [Stampede] 30-கும் மேற்பட்டோர் பலியாகினர்

அறியாமையினால் மாண்டு போகும் திரள் கோடி இந்திய ஜனத்திற்காய் கண்ணீரோடு ஜெபிப்போம்.




சுற்றுச்சூழல் மாற்றங்களுக்காக ஜெபிப்போம். வெயில், பனி, மழை மக்களை பாதிக்காதபடி




## American President Trump Announcements create Chaos

தேசத் தலைவர்களுக்குக்காக ஜெபிப்போம். அவர்கள் தேவ ஞானத்தோடு, வழிநடத்துதலோடு தீர்மானங்களை எடுக்க ஜெபிப்போம்.




பள்ளிகளில் பெருகிவரும் பாலியல் வன்கொடுமைகளுக்காக ஜெபிப்போம்




சிறுப்பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.




குற்ற செயல்களில் ஈடுபடுவோருக்கு தகுந்த தண்டனை கிடைக்க ஜெபிப்போம்.

Mr. Hutson & Mrs. Gifta

# சிலுவை ஊழியம்


Mr. M. Jerome Stanley

இயேசுவை சந்தித்து அவர் உண்மையிலேயே கிறிஸ்துதானா? என்பதை அறிந்துக் கொள்ள வேண்டும் என்பதே நிக்கொதேமுவின் மனதில் தோன்றிய எண்ணம். பரிசேயனாகிய அவனுக்கு அவரைப் பகலில் சந்திக்க விருப்பமில்லை. ஒரு தனி அறை, மங்கி எரியும் விளக்குகள் அதில் அவரின் முகம் மட்டும் பளிச்சென்று இருந்தது. இயேசுவைக் கண்டவுடன் நிக்கொதேமு, நீங்கள் கானா ஊரில் நடந்த திருமண வீட்டில் தண்ணீரைத் திராட்சை ரசமாக மாற்றினீர்கள். அதை செய்வதற்கு இவ்வுலகில் வாழும் எந்த ஒரு மனிதனாலும் இயலாது. இதுவே நீங்கள் தேவனுடைய மகன் என்பதற்கான சாட்சி என்று சொன்னான். இதற்கு அவன் இயேசுவிடமிருந்து எதிர்பார்த்த பதில் “ஆம்” நீ சொன்னபடி நான் தேவனுடைய மகன் தான் என்று. ஆனால் இயேசு கிறிஸ்து அவனுடைய எல்லா மனக்கணக்குகளையும் சுக்குநூறாக உடைத்துப் போட்டார். அவனுடைய உள்ளான ஆத்தும இரட்சிப்பின் அவசியத்தைக் குறித்து அவனோடுப் பேசுகிறார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செலுத்தியது, தெய்வீக உன்னதப் பலி. நமக்கு வரவிருந்த மரணத் தண்டனையை ரத்து செய்யாமல், அவர் தாமே அதை ஏற்றுக்கொண்டார். அவருடைய இரத்தத்தினால் நம்முடைய அடிமைத்தனத்தை உடைத்து, பாவத்தை வெல்லும் ஆற்றலையும், சமாதானத்தையும் நாம் பெற்றுக் கொண்டோம். நம்முடைய தீய செயல்களுக்கான பரிகாரம் கிடைத்தது. சிலுவையின் நற்செய்தி நம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு புதுமையோ, ஆச்சரியமோ அன்று. தங்களுடைய பாவக் கடன்களைத் தீர்த்துக் கொள்ளவும், ஆத்தும சமாதானத்திற்காக முக்தியடையவும் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் பல. இப்படி மனிதர்களின் பல நூறு தேடல்களுக்கு இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய ரத்தமே விடை.

நிக்கொதேமு மோசேயின் எல்லா கட்டளைகளையும், பிரமாணங்களையும் கைக்கொள்வதிலும், அதை மற்றவர்களுக்கு போதிப்பதிலும் பல ஆண்டுகள் அனுபவமுள்ளவன். இருப்பினும் ஆத்தும இரட்சிப்பின் அவசியத்தைப் பற்றி கர்த்தராகிய இயேசு அவனோடு சொன்னபோது அவனுக்கு அது புரியாதப் புதிராகவே இருந்தது. இன்று யோவான் மூன்றாம் அத்தியாயத்தை வாசிக்கும் நமக்கு நிக்கொதேமுவின் ஆத்தும இரட்சிப்பைப் பற்றிய கேள்விகள், சிறுவர்கள் கேட்கும் கேள்விகள் போலவே இருக்கிறது. ஒரு சிறு கல் பெரும் காக்கைக் கூட்டத்தை விரட்டிவிடுவதைப் போல, அவனுடைய எல்லா கேள்விகளையும் கர்த்தராகிய இயேசு மேற்கோள்காட்டிய நிகழ்வுப் பதிலளித்தது. “பாம்பானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும் தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு உயர்த்தப்பட வேண்டும்.

தங்களுடையப் பாலைவன பிரயாணத்தில் இஸ்ரவேல் மக்கள், பயணப்பாதை கடுமையாக இருந்ததால் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகப் பேசினார்கள். இதன் விளைவுப் பாம்புகள் அவர்களில் அநேகரைக் கடித்து கொன்றுப்போட்டது. இதனால் உயிருக்கு போராடியவர்களுக்காக மோசே கடவுளிடம் வேண்டுதல் செய்கிறான். கடவுளின் திட்டப்படி, பாம்பின் நஞ்சு ஏறியவர்களைக் காப்பாற்றுவதற்காக மோசே வெண்கலத்தினாலான பாம்பின் உருவச்சிலை ஒன்றைச் செய்து கம்பத்தில் அதை மாட்டி மக்கள் பார்க்கும்படியாக அதை நாட்டினான். பாம்பின் நஞ்சு ஏறியவர்கள் அந்த உருவச் சிலையை பார்த்தவுடன் சுகமானார்கள். அன்று அந்தப் பாலைவன பிரயாணத்தில் இரண்டு நபர்களைப் பாம்புக் கடிக்கிறது. ஒருவன் தான் சுகமடைவதற்காக கம்பத்திலிருக்கும் பாம்பின் உருவத்தைப் பார்க்க செல்கிறான். அதை பார்த்தவுடன் அவன் உடம்பிலிருந்த நஞ்சு இறங்கி சுகமடைந்தான். மற்றவன் நஞ்சு முறிக்கும் பச்சிலைகளையும், வைத்தியத்தையும் தேடி சுகம் கிடைக்காமல் இறந்துப் போகிறான். இந்த நிகழ்வு இயேசு சிலுவையில் முழு மனுக்குலத்திற்காகக் கடிக்கப்பட்ட போகிறார் என்பதற்கான முன் அடையாளமாகும். ஆத்தும இரட்சிப்புக்கான ஒரே வழி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்புவதும், நம் வாழ்வை அவர்களிடம் ஒப்புக் கொடுப்பதும் மட்டும்தான். வேறு எந்த உடல்ரீதியான முயற்சிகளும் நம்மை பாவக் கடன்களிலிருந்து விடுவிக்க முடியாது.

அவர் தன்னைச் சிலுவையில் முழுப்பலியாக ஒப்புக்கொடுத்ததின் விளைவு, மனிதன் தெய்வத்துவத்தின் உறவில் ஒன்றுபட முடிகிறது. இயேசு சொன்னார் “நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம். நீங்கள் என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன்”. அவர் தேவ தூதன் போலவோ, ஒரு மிருகத்தைப் போலவோ இவ்வுலகிற்கு வராமல் நம்மைப் போலவே மனுவுருவெடுத்து சிலுவை சுமந்ததின் விளைவு, நம்மை அவருடைய பூரண அன்பிற்கு கடன்காரர்களாக்குகிறது. “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்” என்ற வசனத்தை இயேசு நிக்கொதேமுவின் ஆத்தும இரட்சிப்புக்காக, தனிப்பட்ட முறையில் ஒரு இரவு நேரத்தில் சொன்னார். இன்று இந்த வசனங்கள் பிரசங்கிக்கப்படாத மேடைகளோ, கூட்டங்களோ இல்லை. சற்று எதார்த்தமாகக் கவனித்தால் யோவான் 3:16 ஒரு யூதன் மற்றொரு யூதனுக்கு சொல்லும் சிலுவையின் நற்சாட்சி.

நம்முடைய தாய் திருநாட்டில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் தங்கள் ஆத்தும மீட்பைப் பெற்றுக் கொள்ள, மலைகளையும், நதிகளையும், பாபாக்களையும், சாமியார்களையும் நம்பி தங்கள் வாழ்வை வெறுமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். நம் பக்கத்திலிருக்கும் சக இந்தியனுக்கு, நாம் பெற்ற சிலுவையின் நற்செய்தியைச் சொல்லுவது நம்மேல் விழுந்தக் கடமை. பொறுப்பை உணர்ந்தவர்களாக சிலுவையின் நற்செய்தியைச் சொல்ல முன் வருவாயா?



# பெருமை
# PRIDE

Mr. Isaac Kamalesh

வெற்றிக்கான காரணங்களை மட்டுமே கற்றுக் கொண்டிருக்கும் வேளையில், இந்த மாதம் Booster Spot-யில் நாம் தோல்விக்கான காரணங்களைக் கற்றுக்கொள்ள போகிறோம். அதிலும் குறிப்பாக, ஒரே ஒரு காரணத்தை மட்டும் வேத வெளிச்சத்தில் கற்று, கவனமாக அதை தவிர்த்து நாம் வெற்றி பெறப் போகிறோம். ஏனென்றால் உலகில் பாவம் பிரவேசிக்க மூல காரணமாகயிருந்த அந்த ஒற்றைச் செயல் தான் 'பெருமை-Pride'. ஆம் 'நீங்கள் கடவுளைப் போல் இருப்பீர்கள்' என்ற வார்த்தையைக் கேட்ட ஏவாள், சாத்தானின் சதிவலைக்குள் சிக்கிவிட்டாள் என்றால் மிகையாகாது. இன்றும் இந்த பெருமைதான் நம்மில் அநேகரின் வெற்றியுள்ள வாழ்க்கைக்கு சவாலாக உள்ளது. நம்மில் அநேகர் சொல்லும் வார்த்தை "எனக்கு எந்த பெருமையும் கிடையாது" இதுதான் முதலில் ஒழிய வேண்டும். எந்த எதிர்பார்ப்புமின்றி சேவை செய்யும்போது பெருமை குறைய வாய்ப்புண்டு.

கீழே வரும் வசனத்தின் மூலம் 21 காரியங்களைக் கற்றுக் கொள்வோம். (முதலில் வரும் எண் வேதாகம புத்தகத்தின் வரிசை எண், அதை தொடர்ந்து வருவது அதிகாரத்தின் எண், மூன்றாவது நான்காவது எண் வசனத்தின் எண் என வைத்து வசனத்தை எடுத்துப் படித்துக் கொள்)

- ✦ 19-105-5 – பிறனை இரகசியமாய் அவதூறு பண்ணுதல் (Overly conscious of one's importance)
- ✦ 20-3-7 – உன்னை ஞானியென்று எண்ணாதே (Having all the Answer)
- ✦ 20-6-11 – மேட்டிமையான கண் (Proud Look)
- ✦ 23-14-14, 15 – 'நான்' 'என்' போன்ற வார்த்தைகளை உபயோகித்தல் (use of 'I' or 'My')
- ✦ 23-28-1 – அலங்கார ஜோடிப்பு (Overly conscious of one's good look)
- ✦ 40-20-26, 27 – மற்றவர்களுக்கு முன்னுரிமை கொடு (Delight in ordering people around)
- ✦ 40-23-6-11 – உங்களை மற்றவர்கள் அழைக்க விரும்பும் முறை (Loving titles)
- ✦ 41-12-38, 39 – பகட்டு மற்றும் பொது நிகழ்ச்சிகளில் முக்கியத்துவம் (Scrambling for a seat at the head of the table or line)
- ✦ 44-12-21-23 – கடவுளுடைய வேலையில் கடவுளுக்கு மகிமை செலுத்து (Crediting oneself with work done for God)
- ✦ 45-8-6 – தவறான நோக்கம் வேண்டாம் (No wrong motivation)
- ✦ 46-3-20 – அறிவுதிறனுக்கு அதிக முக்கியத்துவம் (Overly conscious of one's intellect)
- ✦ 46-4-6, 7 – முக்கியமானவர்களோடு இருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி (Over exhilaration at being around important people)
- ✦ 47-10-12, 13 – சுய பாராட்டு வேண்டாம் (Self-Commendation)
- ✦ 47-10-15 – மற்றவர்கள் வேலை தன்னைப் பாராட்டுவது (Crediting self with work done by others)
- ✦ 49-5-21 – எரிச்சலூட்டும் வகையில் சுதந்திரமாக இருப்பது (Being irritatingly independent)
- ✦ 50-2-2, 4 – பிறர் மீது அக்கறை இல்லாமலிருப்பது (Having little concern for others)
- ✦ 54-6-4 – வாக்குவாதத்தில் ஆர்வமாக இருக்க வேண்டாம் (Being anxious about debate / semantics)
- ✦ 59-4-16 – மிதமிஞ்சிய தன் திட்டத்தில் பெருமை பாராட்டுதல் (Boasting of what one plans to do)
- ✦ 60-5-5, 6 – பெரியோர்களின் ஆலோசனையைப் புறக்கணித்தல் (Ignoring the advice of elder)
- ✦ 60-5-6, 7 – எல்லா பாரங்களையும், கவலைகளையும் கடவுளிடம் ஒப்படைக்காமல் அல்லது கடவுளின் துணையில்லாமல் தானே தீர்க்கமுயல்வது (Worring instead of casting all care upon God)
- ✦ 62-2-15, 16 – அங்கீகாரம், பதவி மற்றும் பாராட்டுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் (Living, Rewards, Recognition, Position)

# வாசற்படியில் சங்காரக்காரன்

இரட்சிப்பு என்பது பாதுகாப்பு, தீயதிலிருந்து காப்பாற்றும் ஒரு நற்செயல் அல்லது பாவத்திலிருந்து விடுதலை பெறும் நிகழ்வு. மேலும் விடிவு காலம், மகிழ்ச்சி, விமோசனம், முக்தி, மோட்சம், இடர்வராமல் காப்பது போன்ற அர்த்தங்களையும் பார்க்கலாம். சங்காரக்காரனுக்கும், இரட்சிப்புக்கும் என்னங்க சம்பந்தம் என்று கேட்கிறீர்களா! இதை தெரிஞ்சிக்கோங்க, உலகமெங்கும் பஞ்சம், எகிப்திலே தஞ்சம் என எகிப்து தேசத்தில் குடிபுகுந்தனர் யோசேப்பின் குடும்பம் 70 பேர். யோசேப்பு தனது சகோதரர்களால் குழியில் போடப்பட்டு எகிப்தின் அரண்மனைக்கு கொண்டுப் போகப்பட்டு, எகிப்தின் அதிபதியாகி, பார்வோன் ஸ்தானத்தில் உயர்த்தப்பட்டான். முழு எகிப்து தேசமும் அவனுக்கு கீழ்ப்பட்டிருந்தது. இந்த சரித்திரத்தை நாம் யோசேப்பின் வாசற்படியில் என்ற தலைப்பில் கடந்த மாதம் தியானித்தோம். யோசேப்பும் அவனுடைய காலத்தில் வாழ்ந்தவர்கள் எல்லோரும் மரித்த பின்பு யோசேப்பை அறியாத ராஜா ஒருவன் தோன்றுகிறான். அந்த பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களின் பெருக்கத்தைப் பொறுக்கக்கூடாமல் அவர்களை ஒடுக்கவும், அடிமைப்படுத்தவும், துன்பப்படுத்தவும் துவங்குகிறான். இச்சூழ்நிலையில் எகிப்தில் வாழும் இஸ்ரவேல் அனைவரும் பெருமூச்சோடு தேவனிடம் மன்றாடுகின்றனர். தேவன் தன்னுடைய மக்களை மீட்பதற்காக எகிப்து தேசத்தில் இறங்கி வந்து அங்கே தலைவனாக ஆயத்தம் பண்ணப்பட்டிருந்த மோசையை, இஸ்ரவேல் மக்களை மீட்க வா என்று அழைக்கிறார். அவனை மீட்கவிடாமல் பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. அப்போது தேவன் பத்து வாதைகளை அவர்களுக்குள்ளாக அனுப்புகிறார். அதில் பத்தாவது வாதை தலைப்பிள்ளை சாவு. அவனுடைய இருதயம் கடினப்பட்டதின் நிமித்தம், பார்வோனின் தலைப்பிள்ளை முதற்கொண்டு எகிப்து தேசத்திலுள்ள அனைத்து தலைப்பிள்ளைகளையும் சங்கரிக்க சங்காரக்காரன் வருகிறான். அதுவே இந்த பகுதியில் "வாசற்படியில் சங்காரக்காரன்".

**இரட்சிப்பின் அடையாளம் பஸ்கா ஆட்டுக்குட்டி:**

தேவனுடைய பிள்ளைகளைப் பாதுகாக்க, இரட்சிக்க தேவன் ஒரு திட்டத்தை மோசேக்கு கூறி அதை இஸ்ரவேலர்களைச் செய்யவும் வைக்கிறார். அது ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியைத் தேர்ந்தெடுத்து, அதின் இரத்தத்தை எடுத்து நிலைக்கால்களில் ஈசோப்பின் கிளைகளினால் தெளிக்க கட்டளையிடுகிறார். அப்படியாக கர்த்தர் எகிப்து தேசத்தைக் கடந்து வரும் பொழுது யாருடைய நிலைக்கால்களிலெல்லாம் இரத்தம் தெளிக்கப்பட்டிருக்கிறதோ சங்காரக்காரன் அந்த வாசற்படியைக் கடந்து செல்வதைப் பார்க்கிறோம். ஆனால் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்படாத வீட்டு வாசற்படியில் சங்காரக்காரன் சென்று தலைப்பிள்ளைகளைச் சங்கரிப்பதையும் பார்க்கிறோம். எகிப்து முழுவதும் கூச்சலும், அழுகுரலும் எல்லா இடங்களிலும் கேட்கப்பட்டது. ஆனால் ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்டிருந்த வீட்டு வாசற்படியில் சங்காரக்காரன் நுழைவதற்கு அனுமதியில்லை. அதேபோன்று இன்று இயேசு கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரானதால், அவருடைய இரத்தத்தினாலே மீட்கப்பட்ட நாம் அனைவரும் அவராலே பாதுகாக்கப்படுகிறோம்.

**இரட்சிப்பின் ஆதாரம் இயேசு கிறிஸ்துவே:**

இயேசு கிறிஸ்துவே இரட்சிப்புக்கு ஆதாரம். நம்மை சுகமாக்குகிற (யாத். 15:26), நம்மை வெற்றி சிறக்க பண்ணுகிற (17:15), நம்மை பரிசுத்தப்படுத்துகிற (31:13) அத்தனை அனுபவத்தையும் தேவனைச் சார்ந்தே பெற்றுக்கொள்ள வேண்டும். எல்லா தீமையிலிருந்தும் இயேசுவின் இரத்தம் நம்மைப் பாதுகாக்கிறது என்பதை உணர்ந்து வாழ வேண்டும் (12:7, 13) இரட்சிப்பு என்பது பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து இயேசு கிறிஸ்துவால் அவருடைய இரத்தத்தினால் மட்டுமே மீட்கப்பட முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

**இரட்சிப்பின் அனுபவம், கிறிஸ்தவ வாழ்வு:**

இரட்சிப்பின் அனுபவம் இருந்தால் அதற்கான அடையாளம் நமக்கு ஆவியானவரால் உண்டாகும் மனமகிழ்வும், மனநிறைவுமாகும் (ரோமர் 8:15, 16, 5:1, 8:39). நாம் வாழும் இந்த உலகில் தீய வழிகளின் மேல் அருவருப்பும், ஜெபத்திலும் வேதவாசிப்பிலும் அதிகமான விருப்பமும் இருக்கும் (2 கொரி. 5:17, 1 பேதுரு 2:1-3, அப். 9:11), மற்றவர்கள் மேல் உண்மையான பாசமும், அன்புமிருக்கும். நம்முடைய எதிரிகளையும் மன்னித்து அவர்களோடு ஒப்புரவாகி வாழ்கின்ற அனுபவமும் (1 யோவான் 3:14, அப். 24:16, லுக்கா 19:7, 9), ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பிறருக்கு அறிமுகம் செய்யும் ஆர்வமும் இருக்கும். இவை நாம் இரட்சிக்கப்பட்ட அனுபவத்தின் அடையாளம்.

**இயேசு கிறிஸ்து உன் வாழ்வில் வந்ததின் அடையாளமும், அனுபவமும் இல்லையென்றால் உன் வாழ்வு பாதுகாப்பாக இருக்காது. தேவனுக்கு பிரியமில்லாத ஏதாவது ஒரு காரியம் உன் வாழ்வில் இருந்தால் இன்றே விட்டு விடு. அப்படி பாவம் உன் வாழ்வில் இருந்தால் மூன்று காரியத்தைச் செய்யலாம், மன்னிப்பு கேட்கலாம், மனம் திரும்பலாம், மகிழ்ச்சியான வாழ்வை வாழலாம். உன் வாழ்வு உன் கையில்!**

Mr. SM Cymer Selwyn

Rev. Daniel Gnanapragasam

# ஒப்பந்தமும், உடன்படிக்கையும்

## (Contract vs Covenant)

ஒப்பந்தம் என்பது வாக்குறுதிகளைக் கொண்டு இருத்திறத்தவரிடையே ஏற்படும் சட்டப்பூர்வ புரிந்துணர்வாகும். கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட கையெழுத்திடப்பட்ட நிபந்தனைகள் அவசியம். இதன் மூலம் பரஸ்பர, முறைப்படுத்தப்பட்ட புதிய உறவுகள் மற்றும் பொறுப்புகள் நிறைவேறுகின்றன. பொதுவாக ஒப்பந்தம் என்ற பதம் மனிதர்களிடையே ஏற்படுத்தப்படுகின்ற ஒன்று. அது குறிப்பிட்ட நபர், குறிப்பிட்ட பண மதிப்பு, குறிப்பிட்ட காலம் போன்றவற்றோடு தொடக்கமும் முடிவும் கொண்ட ஒரு செயலாக்கம். அந்த குறிப்பிட்ட காலம் முடிந்தவுடன் ஒப்பந்தமும் நிறைவுபெறும்.

அதுபோல உடன்படிக்கை என்னும் சொல்லும் சமய சடங்கு ஒன்றை நிறைவேற்ற கடவுள்தாம் தெரிந்து கொண்ட மக்களோடு செய்துகொள்ளும் புனித ஒப்பந்தத்தைக் குறிக்கின்றது. உடன்படிக்கை என்ற “கடவுளின் ஒப்பந்தம்” மாறவே மாறாது. ஏனென்றால் நம் கர்த்தர் உடன்படிக்கையின் தேவன், அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவன் (எபி. 13:8).

வேதாகமத்திலே குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கைகளாவன:

★ **ஆதாமின் உடன்படிக்கை** - அது நித்தியஜீவனை (ஜீவவிருட்சத்தில்) வைத்து வாய்மொழியால் தனி மனிதனுக்காக ஏற்படுத்தப்பட்ட முதல் உடன்படிக்கை, பரிபூரண கீழ்ப்படிதலை எதிர்பார்த்தது. (ஆதி. 2:16) ஆனால் கீழ்ப்படியாமையால் உடன்படிக்கை மீறப்பட்டது.

★ **நோவாவின் உடன்படிக்கை** - தனிமனிதனின் கீழ்ப்படியாமையால் மீறப்பட்ட உடன்படிக்கையை கிருபையோடு இணைத்து வழங்கப்பட்டது (ஆதி. 6:8). ஒரு குடும்பம் மீட்பின் பேழையால் காக்கப்பட்டது.

★ **ஆபிரகாமின் உடன்படிக்கை** - ஆபிரகாமின் கிரியை நிறைந்த விசுவாசம் அவனுடைய சந்ததிக்கு கிருபையைத் தக்கவைத்தது (ஆதி. 17:7).

★ **மோசேயின் உடன்படிக்கை** - ஒரு சந்ததிக்கு மட்டுமல்ல; ஒரு பெருங்கூட்ட இஸ்ரவேலருக்கு உடன்படிக்கைப் பெட்டியும், நியாயப்பிரமாணமும் வழிகாட்டியாக அடையாளப்படுத்தப்பட்டு கிரியைகளில் எதிர்பார்க்கப்பட்டது (யாத். 34:10).

★ **தாவீதின் உடன்படிக்கை** - ஆசரிப்புக் கூடாரத்திலிருந்து பெரிய தேவாலய ஆராதனை முறைமையும், சிங்காசனமும் ஆட்டுக்குட்டியானவரின் ஆளுகைக்குள் அவருடைய ஜனங்களைக் கூட்டிச் சேர்த்தது. அது நித்திய ராஜ்யத்தின் வாக்குறுதியாக வழங்கப்பட்டது (2சாமு. 7:16).

★ **புது உடன்படிக்கை** - நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாகவும், கிருபையின் பிரமாணமாகவும் சிலுவையில் அடிக்கப்பட்ட இயேசுவின் சரீரமும், இரத்தமும் புதிய உடன்படிக்கையாக (1கொரி. 11:25) அவருக்குள் கீழ்ப்படிந்த அனைத்து விசுவாசிகளுக்கும் ஏற்படுத்தப்பட்டது (எரே. 31:31).

★ **நித்திய உடன்படிக்கை** - இழந்துப்போன ஜீவவிருட்சக் கனியானது புதிய ஆதாமாகிய கிறிஸ்துவில் மீட்கப்பட்டவர்களுக்கு நித்திய ஜீவனாக முத்திரையிடப்பட்டது (வெளி. 2:7).

★ வேதாகமத்திலே குறிப்பிடப்பட்ட உடன்படிக்கைகளை உலக ஒப்பந்தங்களோடு ஒப்பிட்டுப்பார்க்க ஒரு அழைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

| | CONTRACT | VS | | COVENANT |
|---|---|---|---|---|
| 1 | **ஒரு தரப்பிலிருந்து மட்டுமே கொடுக்கப்படும் சட்டப்பூர்வ வாக்குறுதிகள்** | | 1 | **அன்பினால் ஏற்படுத்தப்பட்ட புனித ஒப்பந்தங்கள்** |
| 2 | **மனிதர்களுக்குள்ளே ஏற்படுத்தப்படுகின்ற முறைமை** | | 2 | **கடவுள் மனிதனோடு ஏற்படுத்தும் அன்பின் உடன்பாடு** |
| 3 | **நிபந்தனையோடு முடிந்து விடும்** | | 3 | **நிபந்தனையோடு கூடிய நன்மைகள் தொடர்ந்து வரும்** |
| 4 | **காலமும், இடமும் வரையறுக்கப்படுகிறது** | | 4 | **நித்தியகாலம் வரைக்கும் நிலையானது** |
| 5 | **தனிப்பட்ட நபரோடு முடிந்து விடும்** | | 5 | **தலைமுறை தலைமுறையாக காக்கப்படும்** |
| 6 | **மனித திட்டங்களினால் உறுதிப்படுத்தப்படுகிறது** | | 6 | **கடவுளின் கற்பனைகளினால் நிலைநிறுத்தப்படுகிறது** |
| 7 | **உண்மைகள் உடைக்கப்படுகிறது** | | 7 | **உண்மைகள் காக்கப்படுகிறது** |
| 8 | **இருதரப்புக்கும் சாதகமும், பாதகமும் உண்டு** | | 8 | **இருதரப்புக்கும் மனநிறைவு உண்டு** |
| 9 | **எளிதில் முறித்து விட முடியும்** | | 9 | **முறிக்கப்படுவதில்லை, தலைமுறை தலைமுறையாகத் தொடரும்** |
| 10 | **தன்னலத்துக்கானது** | | 10 | **மனித குல மீட்புக்கானது** |

பிரியமானவர்களே, இவ்வுலக ஒப்பந்தங்கள் அனைத்தும் இம்மையோடு முடிந்துவிடும். அதன் பலனும் பெரிதாக பேசப்படுவதில்லை. ஆனால் ஆண்டவர் நம்மோடு ஏற்படுத்தின உடன்படிக்கை நம்மை அவரோடு சேர்க்கும் வரைக்கும் காக்கப்படுகிறது.

**“இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைகொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது”. (யாத். 19:5)**



# ஜெப ஊழியம்

Mr. Israel Nathaniel Edward

4th WEEK MESSAGE | NT MISSION

'ஊழியம்' (கிரேக்க மொழியில் diakonia) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவைச் செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வாரங்களில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கி.பி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம். இந்த வாரம் நாம் ஜெப ஊழியத்தைப் பற்றி பார்க்க இருக்கிறோம்.

ஜெப ஊழியத்தைப் புரிந்துகொள்வதற்கு முன், ஜெபம் என்றால் என்ன? என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் தம்மைத் தாமே மகிமைப்படுத்திக் கொள்வதே ஜெபத்தின் பிரதான நோக்கமாகும் (யோவான் 14:13). எனவே, ஒரு உண்மையான ஆராதனையைப் போல, ஒரு உண்மையான ஜெபமும் மனிதனின் தேவைகளை அல்ல, தேவனின் மகிமையையே மையமாகக் கொண்டுள்ளது. இதைக் கற்பிப்பதற்காக, நம்முடைய கர்த்தர் தம்முடைய சீஷர்களுக்கு ஒரு மாதிரி ஜெபத்தைக் கற்பித்தார். அதை நாம் 'கர்த்தருடைய ஜெபம்' என்று அழைக்கிறோம் (மத். 6:9-13). இந்த ஜெபத்தின் முதல் மூன்று கோரிக்கைகளில், ஒரு விசுவாசி தேவனின் பெயரைப் பரிசுத்தப்படுத்தவும், அவரது ராஜ்யம் வருவதை ஆசிக்கவும், அவரது சித்தத்தைத் தேடவும் அழைக்கப்படுகிறார். இவற்றில் அவருடைய சித்தத்தைத் தேடுவது மிகவும் முக்கியமானது. ஏனென்றால், அது நடக்காமல், தேவன் நம் இதயங்களையும், குடும்பங்களையும், சமூகங்களையும் ஆள அனுமதிக்க மாட்டோம். தேவன் நம்மை ஆளாமல், நாம் அவருடைய நாமத்தை பரிசுத்தப்படுத்த முடியாது, அதாவது அவரைக் கடவுளாக வணங்க முடியாது.

பின்னர், ஒரு விசுவாசி தனது தனிப்பட்ட வாழ்க்கையைக் குறித்து மேலும் மூன்று விண்ணப்பங்களை வைக்க வழிநடத்தப்படுகிறார். தேவன் மகிமை அடையும் வகையில் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. முதல் விண்ணப்பம் (உணவு) நமது சரீர வாழ்க்கை சம்பந்தப்பட்டது. அது நிகழ்கால தேவையைக் குறிக்கிறது. இரண்டாவது (கடன்) நமது மனம் மற்றும் உணர்ச்சி வாழ்க்கை சம்பந்தப்பட்டது. அது கடந்த காலத்தைக் குறித்த தேவையைக் குறிக்கிறது. மூன்றாவது (சோதனை, தீமை) நமது ஆன்மீக வாழ்க்கை சம்பந்தப்பட்டது. அது நமது எதிர்காலத்துடன் தொடர்புடையது. எனவே, ஜெபத்தின் நோக்கம் உறுதியான பதில்களைப் பெறுவதை முக்கியப்படுத்தாமல், தேவனைச் சார்ந்திருக்கும் வாழ்க்கையை ஆழப்படுத்துவதாக இருக்கிறது.

அன்புடன் தேவனுக்கு அடிபணிந்து கீழ்ப்படிய வேண்டும் என்பதற்கான அழைப்பே ஜெபமாகும். அது வரம்புகளற்ற படைப்பின் நாயகருடன் நமது ஆத்துமா இனிமையான, நெருக்கமான மற்றும் தீவிரமான உறவைக் கொண்டிருக்க அவர் உருவாக்கிய வழியாகும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுவே ஜெப ஊழியத்திற்கான உன்னதமான முன்மாதிரி. பன்னிரண்டாம் வயதில் எருசலேம் தேவாலயத்தில் தனது பரமதந்தையை அவர் பிரதிநிதித்துவப்படுத்துவதைக் காண்கிறோம் (லூக்கா 2:49). முப்பது வயது வரை அவர் என்ன செய்தார் என்பதை நாம் அறிய முடியாது. அவர் ஜெபம் செய்து, தனது ஊழியத்திற்காக தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருந்தார் என்று பொதுவாக கருதப்படுகிறது (லூக்கா 3:23). பின்னர், அவர் தம்முடைய ஊழியத்தை ஆரம்பிப்பதற்கு முன்பாக, தேவனுடைய சித்தத்தை அறியும்படிக்கு யூதேயா வனாந்தரத்தில் 40 நாட்கள் உபவாசித்தார் (லூக்கா 4:1-2,4). ஒரு நபரை சுறுசுறுப்பான ஊழியத்தில் ஈடுபடுத்துவதற்கு முன்பு தேவன் அவரை எவ்வாறு தயார் செய்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள இந்த விஷயங்கள் வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஊழியத்தைத் தொடங்கிய பின், தினமும் இயேசு தேவனிடம் ஜெபித்தார் (மாற்கு 1:35). பின்னர், முக்கிய தருணங்களில் அவர் தேவசமூகத்தில் காத்திருந்து அதிக நேரத்தை ஜெபத்தில் செலவிட்டார். பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் இரவு முழுவதும் ஜெபித்ததாகவும், சிலுவையில் மரிப்பதற்கும் முன்பு மனமூன்றி ஜெபித்ததாகவும் காண்கிறோம் (லூக்கா 6:12-13,22:39-46). கற்பித்தல் மற்றும் குணப்படுத்தும் ஊழியத்திலிருந்து அவருக்கு விடுப்பு கிடைக்கும் போதெல்லாம், அவர் ஜெபத்தில் ஈடுபட்டதையும் நாம் காண்கிறோம் (லூக்கா 11:1, மத். 14:23, லூக்கா 9:28). சுறுசுறுப்பான ஊழியத்திலிருந்து அவரை திசைதிருப்பிய ஒரே காரியம் ஜெப ஊழியம் என்று அறியும்போது, அது நமக்கு ஆச்சரியத்தை வரவழைக்கும். இரகசியமாக செய்யப்படும் ஜெபத்தின் வல்லமையின் அடிப்படையில் தான் ஒரு முன்னணி ஊழியத்தின் வல்லமை விளங்குகிறது என்பதை இது நமக்கு தெளிவாகக் கற்பிக்கிறது.

### நாம் எவற்றிற்காக ஜெபிக்க வேண்டும்?

நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் போதனைகளிலிருந்து,

ஜெபத்தின் நோக்கங்களை நாம் புரிந்துகொள்கிறோம். மக்களின் பரிதாபகரமான நிலையைப் பார்த்து, அவர் தனது சீடர்களிடம் அறுவடையின் ஆண்டவர் தமது அறுவடைக்கு வேலையாட்களை அனுப்ப வேண்டுமென ஜெபிக்க கேட்டுக்கொண்டார்

(மத். 9:36-38). எனவே, மக்களை தனது சபைக்குள் கொண்டுவருவதற்காக தேவன் சந்திக்கப்படாத பகுதிகளுக்கு சுவிசேஷகர்களை அனுப்ப வேண்டும் என்று நாம் அடிக்கடி ஜெபம் செய்ய வேண்டும். அப்போஸ்தலர்கள் இந்த மாதிரியைப் பின்பற்றி, நற்செய்திக்கு ஒரு திறந்த வாசல் உண்டாகுமாறு ஜெபிக்க விசுவாசிகளை வலியுறுத்தினர் (கொலோ. 4:4, 2 தீமோ. 3:1).

தனது சோதனைகளின் போது தனது விசுவாசத்தை இழக்காமல் இருக்க பேதுருவுக்காக இயேசு பரிந்துரை ஜெபம் செய்தார். உண்மையில், இயேசுவின் விண்ணப்பமே பேதுரு இயேசுவின் மீதும், தேவனின் மீதும் வைத்திருந்த விசுவாசத்தை காத்துக்கொள்ள உதவியது. பின்னர், அவர் தனது சக அப்போஸ்தலர்களுக்கு தலைவராக மாறி, திருச்சபையின் ஆரம்ப காலத்தில் அவர்களை வலுப்படுத்தினார் (லூக்கா 22:32, அப். 1:15, 2:14). அது போல, அப்போஸ்தலர்களும் ஒருவருக்கொருவர் ஜெபிக்க விசுவாசிகளை அறிவுறுத்தினர் (எபே. 6:18, எபி. 13:3, 18, 1யோவான் 5:15-16). சக விசுவாசிகள் பல்வேறு வகையான பாடுகளையும், சோதனைகளையும் கடந்து செல்லும்போது, அவர்கள் தேவன் மீதான நம்பிக்கையை இழக்காமல் இருக்க, அவர்களுக்காக பரிந்து பேச இது நம்மை அழைக்கிறது.

கடைசி நாட்களில் அதிகப்படியான உணவு, போதைகள் மற்றும் வாழ்க்கையின் கவலைகளால் நம் இதயங்கள் பாரமடையலாம் என்று இயேசு எச்சரித்தார் (லூக்கா 21:34). இவற்றை வெல்ல, கர்த்தருடைய பெலத்தை அவருடைய சந்நிதியில் காத்திருந்து ஜெபித்து பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அவர் நமக்கு கற்பித்தார் (லூக்கா 21:36). எனவே, இந்த சவால்களை சமாளிக்க கர்த்தருடைய சத்துவத்தின் வல்லமையால் எப்போதும் நம்மை பெலப்படுத்திக் கொள்ள வேண்டும் (எபே. 6:10).

இயேசுவின் ஜெபங்களும் ஜெபத்தின் நோக்கங்களை வெளிப்படுத்துகின்றன. தேவனின் சக்திவாய்ந்த இடைபடுதல்களுக்காக அவர் எப்போதும் ஜெபித்தார் (யோவான் 11:41-42). அப்போஸ்தலர்கள் துன்புறுத்தப்பட்டபோது, அவர்களும் விசுவாசிகளும் தேவனின் வார்த்தையைப் பிரசங்கிக்கவல்ல தைரியத்திற்காக ஜெபித்தனர். மேலும் அவரது சக்திவாய்ந்த இடைபடுதலுக்காக மன்றாடினர். தேவன் அவர்களுடைய ஜெபத்தை உடனே ஏற்றார் (அப். 4:29-31). தீமையின் பரவலால் திசைதிருப்பப்படாமல், தேவனுடைய வலிமையான இடைபடுதலுக்காக நாமும் ஜெபிக்க வேண்டும்.

யோவான் 17ஆம் அதிகாரத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள தனது பிரதான ஆசாரிய ஜெபத்தில், இயேசு தாம் வாக்குப்பண்ணப்பட்ட இரட்சகராக வெளிப்படுத்தப்படவும் (வ.1-2), சீஷர்கள் பொல்லாங்கனுக்கு விலக்கிக் காப்பாற்றப்படவும் (வ.11,15), விசுவாசிகளெல்லாரும் ஒன்றாயிருக்கும்படியும் (வ.11,22), அவர்கள் பரிசுத்தமாக்கப்படவும் (வ.17), பரலோக வாழ்வை பெறவும் (வ.24) ஜெபித்தார்.

அப்போஸ்தலனாகிய பவுலும் இந்த மாதிரியைப் பின்பற்றி, விசுவாசிகள் தேவனை நன்கு அறிந்து கொள்ள வேண்டும் என்று ஜெபித்தார். மேலும் அவர்களின் அழைப்பின் நம்பிக்கை, பரலோகத்தில் அவர்களுக்காக வைக்கப்பட்டுள்ள மகிமையான சொத்து மற்றும் அவர்களை பாதுகாப்பாக பரலோகத்திற்கு கொண்டுவருவதற்காக செயலாற்றும் தேவனின் ஒப்பிடமுடியாத மகா வல்லமையையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஜெபித்தார் (எபே. 1:16-19, 2 தெச. 1:11-12). தேவன் இந்த உலகில் நம் மூலம் தமது குணத்தை வெளிப்படுத்தவும், பாதுகாப்பாக நம்மை பரலோகத்திற்கு அழைத்து செல்லவும் உறுதியாக இருக்கிறார் என்ற மேற்சொன்ன மகிமையான உண்மைகளுக்காக முதலில் நாம் அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். நமது சக விசுவாசிகள் இந்த உண்மைகளைப் புரிந்துகொண்டு, மேலோக காரியங்களில் நாட்டம் கொள்ள வேண்டும் என்று பவுலைப் போலவே நாமும் ஜெபிக்க வேண்டும்.

**அன்பு வாலிப பிள்ளைகளே! ஜெபம் மற்றும் பரிந்துரை செய்தல் என்ற இந்த சவாலான மற்றும் உற்சாகமான ஊழியத்தை மேற்கொள்ள நீங்கள் தயாரா? அப்படி செய்ய இன்றே அர்ப்பணிப்பீர்களா?**



# பழைய வாசல்

**பழைய வாசலின் அர்த்தத்தைப் புரிந்துகொள்வோம்:**
வாசலின் பழைய பதிப்பு "ஜெஷானா கேட்" என்று அழைக்கப்படுகிறது. அதாவது "பழைய வாசல்" என்று பொருள். இந்த வாசல் பசெயாகின் மகன் ஜோய்தா மற்றும் பேசோதியாவின் மகன் மெசுல்லாம் ஆகியோரால் மறுசீரமைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (நெகே. 3:6). இது நகரத்தின் வடமேற்கு மூலையில் அமைந்துள்ள முக்கிய நுழைவாசலைக் கொண்டுள்ளது. இது பழைய பாதைகள் இணைக்கப்படுவதற்கும், எருசலேம் நகரத்திற்குள் நுழைவதற்குமுள்ள வழியாகும். மேலும், நகரத்தின் மூப்பர்கள் தங்கள் சமூகத்தின் பிரச்சனைகள் மற்றும் சிக்கல்களைத் தீர்ப்பதைக் குறித்து உரையாற்ற இந்த வாசலில் சந்திப்பார்கள் (யோசுவா 20:4, ரூத் 4:11). ஆவிக்குரிய வளர்ச்சிக்காக கடவுளின் 'பூர்வீக பாதைகள்' மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கைக்காக கடவுளின் பரிசுத்தத்தைப் பெறுவது அவசியம். இதற்காக பழைய வாசல், 'கர்த்தருடைய வார்த்தையைக்' கற்றுக்கொள்வதற்கான இடமாக இருக்கிறது.

புதிய விசுவாசிகளுக்கான பழைய வாசலின் ஆவிக்குரிய **அர்த்தம்:**
"கர்த்தருடைய வார்த்தை" என்பது கடவுளை அறிவதில் அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியின் முன்னேற்றத்திற்கான ஒரு தனித்துவமான அங்கமாகும் என்ற ஆவிக்குரிய அர்த்தத்தைத் தருகிறது. எந்த எதிர் வாதங்களும் இல்லாமல், தேவனுடைய வார்த்தையானது புதிய விசுவாசிகளுக்கான சமரசம் செய்யப்படாத ஒன்றாகும். ஆவிக்குரிய வளர்ச்சிக்காக இயேசு கிறிஸ்துவின் ஆளுகையை அறிந்து கொள்ள வேண்டும்.

புதிய விசுவாசிகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் முக்கியத்துவம்
மீண்டும் பிறந்த அனுபவம் ஒரு நபரை 'கடவுளின் புதிய படைப்பு' என்பதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வழி செய்கிறது. இங்கே புதிய விசுவாசிகளுக்கு கர்த்தரின் வார்த்தை "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின" [2 கொரி. 5:17] என்பதாகும். புதிதாக உருவாக்கப்பட்ட சபையிலோ அல்லது வேத ஆய்வுக் குழுக்களிலோ கூடிவரும் புதிய விசுவாசிகளுக்கு கடவுளின் சத்தியத்தையும் (பைபிள்), அவருடைய வார்த்தையின் ஆழமான அர்த்தத்தையும் யார் பகிர்ந்து கொள்வார்கள். கடவுளின் வார்த்தை பழைய வாசலில் உள்ள மூப்பர்களால் அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். இது கடவுளின் மக்களுக்கு அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கைக்கான தொடக்கமாகும். மேலும் புதிய விசுவாசிகள் முதிர்ச்சி பெற்ற கிறிஸ்தவராக மாற கடவுளின் வார்த்தையைக் கற்றுக்கொடுக்கும் ஒரு பயிற்சியாளராக தனிநபராக அல்லது குழுவாக இப்பணியில் ஈடுபட வேண்டியது அவசியமாகிறது. பழைய ஏற்பாட்டு போதனை புதிய விசுவாசியை கட்டளைகளை அங்கீகரிக்க ஆதரிக்கிறது. கூடுதலாக, அவர்களின் வாழ்க்கைக்கான ஆசீர்வாதங்களுக்காக கடவுளின் கொள்கைக்கு அடிபணிவதாகும்.

புதிய ஏற்பாட்டை நம்புபவர்களுக்கு பழைய ஏற்பாட்டு போதனையின் முக்கியத்துவம்.
புதிய ஏற்பாட்டுக் காலம் பழைய ஏற்பாட்டின் சட்டத்தின் ஆசிரியர்களாக இருந்த 'ரபி' பற்றி பேசுகிறது. இயேசு கிறிஸ்து என்றென்றும் ரபி. 'ஆறுதலளிப்பவர்' [பரிசுத்த ஆவியானவர்] கிறிஸ்துவில் வளர விசுவாசிகளுக்கு கற்பிப்பார், வழிநடத்துவார், அறிவுறுத்துவார் என்று அவர் உறுதியளித்தார். எந்த தயக்கமும் இல்லாமல், புதிய விசுவாசிக்கு பைபிள் ஆசிரியர்கள், பைபிள் பெண்கள் மற்றும் தலைவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தேவை என்பதை நாம் ஒப்புக்கொள்ளலாம். மனந்திரும்புதலுக்காக நாம் கிறிஸ்துவுக்குள் பழைய மனிதனையும், சுயத்தையும், இயல்பையும் விட்டுச் செல்கிறோம். நாம் மீட்கப்பட்டு, புதியவர்களாகி, பழைய வாசல் வழியாக, புதிய இடங்களுக்கு கொண்டு வரப்படுகிறோம். இயேசு கிறிஸ்து நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாக மாறும்போது நாம் பழையதிலிருந்து புதியதாக மாறிவிட்டோம். வாழ்க்கையின் இந்த புதிய தன்மையில் நடப்பதை விட சிறந்தது எதுவுமில்லை. பழைய வாசல் நம்மை புதிய வாழ்க்கைக்கு அழைத்துச் செல்வதோடு, புதிய வாழ்க்கைக்கு அடித்தளமாகவும் அமைகிறது. இது விசுவாசத்தின் பாதுகாப்பு மற்றும் கடவுளின் உண்மை. மேலும் எதிர் தாக்குதல்களுக்கும் அவிசுவாசிகளின் துன்புறுத்தலுக்கும் நிறுவப்பட்டது.

**உங்கள் முடிவின் அவசியம்:**
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வேதத்தை மொழிபெயர்ப்பவர்கள் மற்றும் கற்றுக்கொடுப்பவர்களைத் தேடுகிறது. இந்த இயக்கம் வெவ்வேறு மக்கள் குழுக்களாக 11 வேறுபட்ட மொழிகளில் வேதத்தை மொழிபெயர்க்கும் ஊழியத்தில் ஈடுபட்டுள்ளது. புதிய விசுவாசிகள் நூற்றுக்கணக்கான கிராமங்களிலிருந்து வேதத்தைப் படிப்பதற்காக தனித்தனியாக மற்றும் சிறு குழுக்களாக கூடிவருகின்றனர். சபையின் பெரியவர்கள், வாலிபர்கள், ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள், பெண்கள் மற்றும் தன்னார்வலர்களின் பயிற்சிகள் என FMPB சபை நிறுவும் பணியில் முக்கிய கவனம் செலுத்துகின்றன.
"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடு" என்பது கடவுளுடைய கட்டளையாகும் (மத்தேயு 28:19). வட இந்தியாவில் உள்ள பல்வேறு இன மக்களின் கலாச்சார சூழலில் வேத (Bible) மொழிபெயர்ப்பாளராகவோ அல்லது வேதத்தை கற்றுக்கொடுப்பவராகவோ சேர நீங்கள் விரும்புகிறீர்களா? வேத (Bible) மொழிபெயர்ப்பாளர்களில் ஒருவர் மேற்கோள் காட்டுகிறார். மால்டோ, வார்லி, வசவா, குருக் மற்றும் பாவ்ரா மொழிகளில் கடவுளின் வார்த்தையை மக்கள் இனத்திற்கு அவர்களது தாய்மொழியில் FMPB மொழிபெயர்த்துள்ளது.

**இயக்கங்களில் ஈடுபடுவதற்கான இளம் தலைமுறையினருக்கான சவால்:**
புதிய விசுவாசிகள் கடவுளின் பரலோக ராஜ்யத்தில், கடவுளின் பிரசன்னத்திலிருந்து வரப்போகும் எருசலேமில் நுழைவதற்காக பழைய வாசலில் [சட்டம் விவாதிக்கப்படும் இடம்] உங்களுக்காக FMPB எதிர்நோக்கியுள்ளது. நீங்கள் இந்த பெரிய பணியில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ளாவிட்டால், புதிய விசுவாசிகளுக்கு கடவுளைப் பற்றிய சிறந்த செய்தியைக் கூறுபவர் யார்? நீங்க ரெடியா? FMPB உடன் இணைந்து இப்பணியில் ஈடுபட நீங்கள் ஆயத்தமா? இன்னும் ஏன் தாமதம். இதோ திறந்த வாசல்! வாருங்கள்!

அப்போ! இப்போ! எப்போ!!

Rev. Prabakara Sarathy

## நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

# மாநில முகாம் 2025

**மே 15-18**

வியாழன் காலை
9:30 மணி முதல்
ஞாயிறு காலை
8 மணி வரை

**பெத்தேல்**
டேனிஷ்பேட்டை, சேலம்

### செய்தியாளர்கள்

சகோ. சுசி பிரபாகரதாஸ்
சகோ. G. ஜாண் சாமுவேல்
சகோ. விஜய் P. ஐசக்
சகோ. Y. நவநீதர்
சகோ. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங்
மற்றும் பணித்தள ஊழியர்கள்



கருப்பொருள்

## இவர்களிலும் அதிகமாய்

யோவான்.21:15

**ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!**

---

மாநில முகாமில் பங்கு பெறும் இளம் வாலிபர்கள் மற்றும் வாலிபர்களுக்கான வேதாகமத் தேர்வு (வயது 15 முதல் 30 வரை)

- வேதாகமப் பகுதி யோசுவா மற்றும் மாற்கு
- 2025 ஜனவரி முதல் மே மாதம் வரையுள்ள கேரீத் மாத இதழிலிருந்து வினாக்கள் கேட்கப்படும்.
- தேர்வு தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடத்தப்படும். (ஆங்கிலம் NKJV வேதாகமம் பின்பற்றப்படும்)
- தேர்வு நாள் மாநில முகாமின் 2 ஆம் நாள் (16.5.25)
- தேர்வு நேரம் இரவு 8 மணி முதல் 10 மணி வரை
- பரிசுக்கு குறைந்தது 50 மதிப்பெண் எடுக்கவேண்டும்
- தேர்வில் முதன்மை பெறும் முதல் மூன்று நபர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும்.
- மற்றவர்களுக்கு தகுதி சான்றிதழ் அளிக்கப்படும்.

இடம்:
**பெத்தேல் வளாகம்,**
டேனிஷ்பேட்டை, சேலம்

FMPB Youth Wing
PH - 9445040148

# ஞான பொக்கிஷம்

விவிலிய ஆழம் அறிய

**2025**

